உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫.] ஈசுவர ௵ மார்கழி மீ [பகுதி-௨.
Vol. 35. December 1937—January 1938. No. 2.

மகாகவி பாஸராால் இயற்றப்பெற்ற

கர்ணபாரம்.

[பாஸமஹாகவியியற்றிய நாடகங்களுள் இச்செந்தமிழில் வெளியிடப்பட்டுவந்த பாஞ்சராத்ரம் என்ற நாடகம், கார்த்திகைப்பகுதியில் முற்றுப்பெற்றுள்ளது. அடுத்துப் பெருங்கொடையாளியான கர்ணன் இந்திரனுக்குக் கவசகுண்டலங்களையளித்த விருத்தாந்தமேற்கொண்டு அவரியற்றிய கர்ணபாரம் என்ற சீரிய சிறிய நாடகம் இப்பகுதியில் மொழிபெயர்த்து வெளியிடலாயிற்று. V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.]

பிரஸ்தாவனை.

ஸூத்ரதாரன்:—(நாந்தியினிறுதியில் அரங்கமேறி)

𑌨𑌰𑌮𑍃𑌗𑌪𑌤𑌿𑌵𑌰𑍍𑌷𑍍𑌮𑌾𑌲𑍋𑌕𑌨𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌨𑌾𑌰𑍀
𑌨𑌰𑌦𑌨𑍁𑌜𑌸𑍁𑌪𑌰𑍍𑌵𑌵𑍍𑌰𑌾𑌤𑌪𑌾𑌤𑌾𑌲𑌲𑍋𑌕𑌃 ।
𑌕𑌰𑌜𑌕𑍁𑌲𑌿𑌶𑌪𑌾𑌲𑍀𑌭𑌿𑌨𑍍𑌨𑌦𑍈𑌤𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑌾𑌃
𑌸𑍁𑌰𑌰𑌿𑌪𑍁𑌬𑌲𑌹𑌨𑍍𑌤𑌾 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌵𑌃 ॥

மனிதவுருவமும் சிங்கவுருவமும் கலந்ததான திருமேனியைக் கண்டு மகளிரும், ஆடவரும், அசுரரும், தேவரும், கருடரும், உரகரும்: ஆகிய இவர்களை அச்சமுறச்செய்தவரும், நகமாகிய

*

வயிர ஆணியால் அசுர அரசன்மார்பைப் பிளந்தவரும், விண்ணவர்களுடைய பகைவர்சேனையை மாய்த்தவரும் ஆன ஸ்ரீதரர் உங்களுக்கு நன்மைபயப்பாராக.

இவ்வாறு பெரியோர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். நான் விண்ணப்பஞ்செய்யத்தொடங்கும்போது ஏதோ சத்தம் கேட்கப்படுகிறதே. ஓ! பார்க்கிறேன்.

(திரைக்குள்) ஓ! ஓ! மகாராஜரான அங்கதேயத்தரசரிடம் தெரிவிப்பீர்களாக.

ஸூத்ரதாரன்:—இருக்கட்டும்; தெரிந்தது.

ஸம்ப்ராப்தே தார்தராஷ்ட்ரே ஜாதே கண்டாய க்ருதாஞ்ஜலி:।
நிவேதயதி ஸம்ஹ்ராந்தோ ஹ்ருத்யோ துர்யோதனாஜ்ஞயா ॥

நெருங்கிய போர்மூண்டபோது, துர்யோதனராணையால், வேலையாளொருவன் பரபரப்புடன் கைகூப்பிக் கர்ணராஜரிடம் தெரிவித்துக்கொள்கிறான். (வெளியேறுதல்.)

வேலையாள்:—(அரங்கிற்புகுந்து) ஓ! ஓ! மகாராஜரான அங்கதேயத்தரசரிடம் யுத்தகாலம் நெருங்கிவிட்டதென்று தெரிவிக்கப்படட்டும்.

க்ருதாந்தமாயஸ்யூஸ்: வாயுகேதா: வாராஷ்ட்ராக்ஷ
ஸாதித ந்ருவதிஸிம்ஹை: ஸிம்ஹநாத: க்ருதோऽத்ய।
த்வரிதஸிதிநாதைர்ஜத்ரக்ஷஹம் லோகவீர:
ஸமரஜயிமதாய: வ்யூஷிதோ நாமகேது: ॥

யானையும் புரவியும் தேரும் ஆகிய இவற்றின்மீதிருக்கிற ராஜஸிம்ஹர்களால் அர்ஜுனனுக்குமுன்பே சிங்கநாதஞ்செய்யப்பட்டது; உலகத்துக்கே தனிவீரரான அரவகேதனர், பகைவர்கள் ஆரவாரிப்பதைப்பொறுமல், நிகழ்ச்சிகளைத்தெரிந்துகொண்டு போர்க்குப் புறப்பட்டார். (சற்றுத்தூரம் நடந்துபார்த்து) ஓ! இந்த அங்கவரசர் போர்க்குத் தகுந்தவைகளான ஆடைகளை அணிந்து

கொண்டு சல்லியராஜருடன்கூடியவராகத் தன்னுடைய மாளிகையைவிட்டுப் புறப்பட்டு இங்கேயே எழுந்தருளுகிறார். ஓ! போரிற் சிறந்தவரும் மிகவும் வலிமையுடையவரும் ஆன அவருக்கு முன் இல்லாத மனக்கலக்கம் ஏற்பட்டிருக்கிறதே!

ஜத்யூஹ்யதீப்தவிஶத: ஸமரே ஶெளர்யே
ஶௌர்யே ச ஸம்ப்ரதி ஸஶோக உபைதி தீவ்ரம்।
ப்ராப்தே நிதாகஸமயே க நராஶிராத்த:
ஸூர்ய: ஸ்வஹாவராத்ரிமே நிவஹைரிவாத்ரிகணை:॥

கடுமையான ஒளியால் விளங்குபவரும், போரிலும் சௌர்யத்திலும் மேம்பட்டவராகக்கொள்ளப்பட்டவரும், அறிஞரும்: ஆன இவர் வருத்தமடைகிறாரே! கோடைகாலத்தில் இயற்கையில் மிகவும் ஒளியுடைய கதிரவன் மேகவரிசைகளால் மறைக்கப்பட்டதுபோல் இவர் காணப்படுகிறார். நான் இவரிடம் செல்லுகிறேன். (வெளியேறுதல்.)

(பிறகு முன்வருணிக்கப்பட்டபடி கர்ணனும் சல்லியனும் அரங்கத்திற் புகுதல்)

கர்ணன்:—மா தாவதஸ்மச்சரமார்கலக்ஷ்யபூதா:
கிம் ப்ராப்தா: க்ஷிதிபதய: ஸஜீவஶேஷா:।
கர்தவ்யம் ரணஶிரஸி ப்ரியம் குரூணாம்
த்ருஷ்டவ்யோ யதி ஸ ஹவேத்தனஞ்ஜயோ மே॥

என்னுடைய பாணங்களுக்கு இலக்காயிருந்த அரசர்களுள் எவரே உய்ந்தனர்? (ஒருவரும் இல்லை). கௌரவர்களுக்குப் பிரியமானசெயலைச் செய்யவேண்டுமானால் அந்தத் தனஞ்சயனைப் போர் முகத்திற் காணவேண்டும்.

சல்லியன்:—நல்லது; (தேரை ஓட்டுதல்)

கர்ணன்:—அந்யோந்யஶஸ்த்ரவிநிபாதநிக்ருத்தகாத்ர
யோதாஶ்வவாரணரதேஷு மஹாஹவேஷு।
க்ருத்தாந்தகப்ரதிம விக்ரமிணோ மமாபி
வையஸ்யமாபததி சேதஸி யுத்தகாலே॥

ஒருவரையொருவர் ஆயுதங்களால் தாக்குதலால் சிதைந்த உடல்களையுடையவர்களாகிய படையாட்களும் குதிரைவீரர்களும் யானையேறும் சூரர்களும் இரதங்களையூர்ந்துவரும் வில்லாளிகளும் ஆகிய இவர்களுடன் பெரும்போர் நிகழுங்கால், சினங்கொண்ட இயமன்போற் போர்புரிபவனான எனக்கே, போர்தொடங்கும் இப்போது மனக்கலக்கம் உண்டாகிறதே! ஓ! கஷ்டம்.

𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑍁𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍋 𑌰𑌾𑌧𑍇𑌯𑌇𑌤𑌿𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃।

𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑍇𑌮𑍇 𑌯𑌵𑍀𑌯𑌾𑌂𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃॥

நான் முன் குந்தியின்வயிற்றிலுதித்தும், ராதேயன் எனப் பெயர்பெற்றவன்; யுதிஷ்டிரன்முதலான பாண்டவர்கள் எனக்குத் தம்பிமார்களாவர்.

𑌅𑌯𑌂 𑌸 𑌕𑌾𑌲𑌃 𑌕𑍍𑌰𑌮𑌲𑌬𑍍𑌧𑌶𑍋𑌭𑌨𑍋
𑌗𑍁𑌣𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑍋 𑌦𑌿𑌵𑌸𑍋𑌽𑌯𑌮𑌾𑌗𑌤𑌃।
𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌗𑌤𑍋 𑌹𑌿 𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌂
𑌮𑌾𑌤𑍁𑌶𑍍𑌚 𑌵𑌚𑌨𑍇𑌨 𑌵𑌾𑌰𑌿𑌤𑌃॥

இது, முறையாய் மங்களத்தையடைந்த காலமாகும்; மிக்க குணங்களுடையதாக இந்த நாள் வந்திருக்கிறது; என்னுடைய அன்னையின்வசனத்தால் தடுக்கப்பட்டமையால் என்னால் கற்கப்பட்ட அஸ்திரவித்தை பயனற்றதாகிவிட்டதே! (வெளிப்படையாய்) ஓ! மத்திரராசனே! என் அஸ்திரத்தின் விருத்தாந்தத்தைக் கேட்பீராக.

சல்லியன்:—இந்தக் கதையைக் கேட்க எனக்கும் ஆவல் உண்டு.

கர்ணன்:—முன்பு நான் ஜமதக்கினிமுனிவரின் புதல்வரிடம் சென்றிருந்தேன்.

சல்லியன்:—பிறகு! பிறகு!

கர்ணன்:—பிறகு,

𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌲𑍍𑌲𑌤𑌾𑌕𑌪𑌿𑌲𑌤𑍁𑌙𑍍𑌗𑌜𑌟𑌾𑌕𑌲𑌾𑌪
𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌲𑌯𑌿𑌨𑌂 𑌪𑌰𑌶𑍁𑌂 𑌦𑌧𑌾𑌨𑌮𑍍।
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌂 𑌭𑍃𑌗𑍁𑌵𑌂𑌶𑌕𑍇𑌤𑍁𑌂
𑌗𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌨𑌿𑌕𑌟𑍇 𑌨𑌿𑌭𑍃𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿॥

மின்னற்கொடிபோற் பொன்னிறமுள்ள உயர்ந்த சடைகளையுடையவரும், புதிதுபுதிதான ஒளிவட்டத்துடன் விளங்குகிற கோடரியைக் கையில் ஏந்தியவரும், பிருகுவம்சத்துக்குக் கொடி போன்றவரும், க்ஷத்திரியர்களுக்கு இயமனும் ஆன அந்தமுனிவரை அணுகி அவரைத்தொழுது அருகில் நின்றேன்.

சல்லியன்:—பிறகு! பிறகு!

கர்ணன்:—ஜாமதக்கினியர் என்னை ஆசீர்வதித்து "நீ யார்? எதற்காக வந்திருக்கிறாய்?" என்று வினவினார்.

சல்லியன்:—பிறகு! பிறகு!

கர்ணன்:—"எல்லா அஸ்திரவித்தைகளையும் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்" என்று வணக்கத்துடன் விடையிறுத்தேன்.

சல்லியன்:—பிறகு! பிறகு!

கர்ணன்:—'அந்தணர்களுக்குமட்டும் கற்பிப்பேன்; அரசர்களுக்குக் கற்பிக்கமாட்டேன்' என்று பகவான் மறுமொழியளித்தார்.

சல்லியன்:—பகவானுக்கு அரசரிடம் முன்பே பகை உளதே!

கர்ணன்:—பிறகு, "நான் அரசனல்லேன்" என்று சொல்லிக் கற்றுக்கொள்ளத்தொடங்கினேன்.

சல்லியன்:—பிறகு!

கர்ணன்:—சின்னாட்கள் சென்றபின் ஒருநாள் பழம், கிழங்கு, புஷ்பம், ஸமித்து: இவைகளைக் கொணர்வதற்காகக் கானகத்துக்குப் பகவானுடன் நானும் சென்றேன்; பின் காட்டில் அலைந்ததால் உண்டான களைப்பினால் பகவான் என்மடியில் தலையை வைத்துக்கொண்டு துயில்புரிந்தார்.

சல்லியன்:—பிறகு! பிறகு!

கர்ணன்:—பிறகு!

…த்தவஜ்ரமுகேந நாகேந்த்ரிணா … [illegible]
நித்ராச்சேதபயாதஸஹ்யத மயா தைர்யாத்ததா வேதநா ।
…த்தாய க்ஷதஜாப்லுத: ஸ ஸஹஸா ரோஷாநலோத்தீபிதோ
புத்த்வா மாம் ச ஶஶாப காலவிபலாந்யஸ்த்ராணி தே ஸந்த்விதி ॥

ஊழ்வலியால் என்னுடைய இரண்டுதுடைகளும் "வைர முகன்" என்ற பெயருள்ள வண்டால் துளைக்கப்பட்டபோது, அதனால் விளைந்த துன்பத்தை ஆசிரியருடைய நித்திரைக்கு இடையூறு வருமேயென அஞ்சி மனவலியாற் பொறுத்துக்கொண்டிருந்தேன்; வண்டுதுளைத்த துளைவழி பெருகிய உதிரத்தால் நனைக்கப்பட்டு அவர் உடனே விழித்துக்கொண்டு சினத்தீயால் விளக்கமிக்கவராகி என்னை (இன்னன் என) அறிந்துகொண்டு, "உன்னுடைய அஸ்திரங்கள் உற்றபொழுதிற் பயனற்றவையாகுக" என்று சபித்தார்.

சல்லியன்:—பெரியோரால் வருந்தத்தக்கசெய்தி உரைக்கப்பட்டதே!

கர்ணன்:—இப்போது அஸ்திரத்தின்நிலைமையைப் பரீக்ஷித்துப்பார்ப்போம். (அவ்வாறுசெய்து), அஸ்திரங்கள் வீர்யமற்றவைபோல் காணப்படுகின்றனவே! மேலும்,

[illegible] தைந்யநிமீலிதேக்ஷணா,
[illegible] ।

கஜாஶ்ச ஸப்தச்சததாநகந்திந:
நிவேதயந்தீவ ரணே நிவர்தநம் ॥

இந்தப் புரவிகளோ வலிமைகுன்றியதால், கண்களைமூடிக்கொண்டு, எனக்கு வசப்படாமல் அடிக்கடி நழுவுகின்றன; களிறுகளோ ஏழிலைப்பாலைப்பால்போன்ற மதநீரால் வாசனையுள்ளவை

யாய்ப் போரிலிருந்து திரும்பிச்செல்லும்படி தெரிவிக்கின்றன போலும்.

சங்கும் பேரிகைகளும் ஓவியற்றனவே!

சல்லியன்:—இது மிகவும் வருந்தத்தக்கது.

கர்ணன்:—சல்லியராஜனே! துக்கமடையவேண்டாம்.

ஹதொZவிஜஹெதஸ்ஹ-ஂ ஜிதாதூ ஜஹதெயஶஃ।
உஹெ ஬ஹுமதெ லொகெ நாஸ்திநிஷ்ஃலதாரணெ॥

மாண்டால் சுவர்க்கம் கிட்டும்; வென்றால் புகழ் உண்டாகும்; இரண்டும் விரும்பத்தக்கவையே; போர் ஒருகாலும் சிறிதும் பயனற்றதாகாது. மேலும்,

ஏதெ ஹி யுஜெஷு நிவதி-ஂதாஶா
ஹயாஃ ஸுவணெ-ஂந ஸஶா நவெஹாஃ।
ஸ்ரீகாஂஹொஜகுலெஷு ஜாதா
ரக்ஷந்தி யஜ்விராக்ஷிதவ்யு॥

இந்தப் புரவிகள், கருடனுக்குச் சமமான வேகமுடையன வாயும், போரிலிருந்து திரும்ப விருப்பமற்றவையாயும், பெருமை பொருந்திய காம்போஜநாட்டுப் பிறந்து சிறந்தவற்றின் வழிவந்தன வாயுமிருத்தலால், காக்கவேண்டியதைக் காக்கின்றன.

பசுக்களும் பார்ப்பார்களும் குறைவின்றி வாழ்க; கற்புடைய மகளிர் குறைவின்றி விளங்குக; போரிற் புறங்காட்டாதவீரர் களுக்குத் தாழ்வுவாராதொழிக. சமயம்வாய்ந்தவனான எனக்கும் குறைவுவாராதொழிக. ஓ! நான் தெளிவடைந்தேன்.

ஸஶூவஸஹஸ்ரம் வாணவா நாம் வூவிஶ்
வூயிதகுணகணா஢்யம் யத்ராஜம் வ வஷ்யா।
ஏஏ ஶரவரவெமொஜஂநம் வா தயித்வா
வநிவ ஹதஸிம்ஹம் ஸுவ்ரவெஶம் கரொமி॥

அணுகமுடியாததான பாண்டவர்களுடைய போர்முனையிற் புக்கு, மிகவும் குணங்கள்வாய்ந்தவனான தர்மராஜனையும் பிணித்து என்னுடைய பெயர்பெற்றவையான பாணங்களின் வேகத்தால் பார்த்தனையும் வீழ்த்திச் சிங்கம் மாய்க்கப்பட்டதால் அச்சமின்றி நுழையக்கூடியதாகக் கானகம் செய்யப்படுவதுபோல் போர்முனையை எளிதிற் புகக்கூடியதாகச்செய்கின்றேன்.

சல்லியராஜனே! நாம் இரதத்தில் ஏறுவோம்.

சல்லியன்:—நல்லது.

(இருவரும் தேர்மீதேறுவதுபோல் நடித்தல்.)

(திரைக்குள்) ஓ! கர்ண! பெரியபிச்சையை இரக்கிறேன்.

கர்ணன்:—(குரலைக்கேட்டு) ஓ! குரல் ஆற்றலுள்ளதே!

ஸ்ரீமானெஷ நகேவலம் த்விஜவரோ யஸ்மாத்ப்ரபாவோத்தமா
நாதஸ்ய ஸ்வரஸௌம்ய தீரமதுரம் விஸ்ராவிதாம் மாதவ।
உத்கண்டஸ்திதாம் விதாக்ஷவர் தீவ்ராவிஷ்டா ஹ்யா நநா
ஸ்திஷ்டந்த்யஸ்வலம்பந்தி ஸஹஸா யாஸ்ணோமேமே தஹயா:॥

இவன், சிறந்த பார்ப்பானாகமட்டும் இல்லை; ஏனெனில் செல்வனாகவும் மிக்கபெருமையுடையவனாகவும் காணப்படுகிறான். துணிவும் இனிமையுமுடையதாயிருக்கிற இவனுடைய குரலைக்கேட்டுச் சென்றுகொண்டிருந்தவையான என்னுடைய தேர்ப்புரவிகள், செவிகளை உயர்த்திக்கொண்டும் வளைக்கப்பட்ட கழுத்திலும் முகத்தின் நுனியிலும் நோக்கத்தைச் செலுத்திக்கொண்டும் உறுப்புக்கள் தம்வசப்படாமையால் சித்திரத்தில் வரையப் பட்டவைபோல் உடனே நின்றுவிட்டனவே! (உழையரைநோக்கி) அந்த அந்தணரை அழைப்பீர்களாக. இல்லை, இல்லை; நானே அழைக்கிறேன். பகவானே! இங்கே, இங்கே.

இந்திரன்:—(பிறகு பார்ப்பனவடிவத்துடன் அரங்கிற் புகுந்து) ஓ! முகில்காள்! நீங்கள் விருப்புடன் திரும்பிச்செல்லுங்கள். (கர்ணனை அணுகி) ஓ! கர்ண! பெரியபிச்சையை இரக்கிறேன்.

கர்ணன்:—பகவானே! நான் மிகவும் உவப்படைந்தேன்.

> பாதஃ க்ருதார்த்தமணநா ஸஹஸ்ரயோகே
> ராஜேந்த்ரமௌலிமணிரஞ்ஜிதபாதபத்மஃ ।
> விப்ரேந்த்ரபாதரஜஸா ச பவித்ரமௌலிஃ
> கர்ணோ பவந்தமஹமேவ நமஸ்கரோதி ॥

சிறந்த அரசர்களின் மகுடங்களிலுள்ள மணிகளால் ஒளிர்கிற பாததாமரைகளுடன் கூடியவனுயிருந்தும், பார்ப்பனப்பெரியோர்களுடைய பாததூளிகளால் தூய்தாக்கப்பட்ட தலையுடன்கூடினவனும் கர்ணன் என்ற பெயருடையவனும் ஆன யான் தங்களை வணங்குகிறேன்; யான் இன்று உலகத்தில் பேறுபெற்றவர்களுள் ஒருவனுகக் கருதப்பட்டேன்.

இந்திரன்:—(தனக்குள்) இப்போது என்னுல் என்ன உரைக்கத் தக்கது? "நீண்ட ஆயுளுடையவனுக இருப்பாயாக" என்று வாழ்த்துவேனுனல், இவன் இறப்பற்றவனுய் வாழ்ந்திருப்பானே! நான் வாழ்த்தாவிடில், என்னை மூடனென்று இவன் இகழ்வானே! இரண்டையும் விலக்கிவிட்டு எதைச் சொல்வேன்? சரி. தெரிந்தது. (வெளிப்படையாய்) ஓ! கர்ண! கதிரவனும் கலைமதியும் இமயமலையும் கடலும்போல உன்னுடையபுகழ் வளர்ந்திருக்கட்டும்.

கர்ணன்:—"தீர்க்காயுளுடையவனுக இருப்பாயாக" என்று வாழ்த்தக்கூடாதா? இதுவும் நன்மைக்கே. ஏனெனில்,

> தர்மோ ஹி யத்நைஃ புருஷேண ஸாத்யோ
> புஜங்கஜிஹ்வாசபலா ந்ருபஶ்ரியஃ ।
> தஸ்மாத் ப்ரஜாபாலநமாத்ரபுத்த்யா
> ஹதேஷு தேஹேஷு குணா தரந்தே ॥

புருஷனுல் பலபாடுகள்பட்டும் தேடத்தக்கது அறமே. மக்களுடைய செல்வங்களோ அரவினுடைய நாவேபோல அசைவுடையனவே (விரைவில் அழியக்கூடியவைவயே). நிலையற்ற உடல்கள்

அழிந்தாலும், நெறிதவறாமல் நாட்டைக்காத்தலால் வந்த புகழ்கள் எந்நாளும் அழியாதனவன்றோ!

பகவானே! எதை விரும்புகிறீர்கள்? நான் எதைக் கொடுக்க வேண்டும்.

இந்திரன்:—பெரிய பிச்சையை யிரக்கிறேன்.

கர்ணன்:—தங்களுக்குப் பெரியபிச்சை இடுவேன். என்னிடத் துள்ளவற்றைக் கேட்பீர்களாக.

குணவதம்ருதகல்பக்ஷீரதாராபிவர்ஷி
த்விஜவர! ஸஹிதம் தே த்ருப்தவத்ஸாநுயாதம் ।
தருணமபிகபிலைகப்ராயமேகம் பவித்ரம்
விஹிதகநகஶ்ருங்கம் கோஸஹஸ்ரம் ததாமி ॥

குணங்கள் நிறைந்தனவாயும் அமுதம்போன்ற பாலை மிகவும் பொழிவனவாயும், வயிறுநிறையப் பருகி மகிழ்ச்சியடைந்த கன்றுகளுடன் கூடியனவாயும், நடுவயதுடையவையாயும், இரவலரால் மிகவும் விரும்பத்தக்கனவாயும், தூய்மையுடையனவாயும், பொன்னுரைபதித்த கொம்புகளுடன் கூடியனவாயும் உள்ள ஆயிரம்பசுக்களைத் தங்களுக்குக் கொடுக்கிறேன்.

இந்திரன்:—'ஆயிரம்பசுக்கள்' (என்று) சற்றுநேரம் பாலைக் குடிக்கிறேன்; கர்ண! நான் விரும்பவில்லை; விரும்பவில்லை.

கர்ணன்:—தாங்கள் விரும்பவில்லையா? இதையும் கேட்பீர்களாக.

ரவிதுரகஸமாநம் ஸாதநம் ராஜலக்ஷ்ம்யா:
ஸகலந்ருபதிமாந்யம் மாந்யகாம்போஜஜாதம் ।
ஸகுணமநிலவேகம் யுத்தத்ருஷ்டாபதாநம்
ஸபதி பஹுஸஹஸ்ரம் வாஜிநாம் தே ததாமி ॥

சூரியனுடையகுதிரைகளையொத்தனவும், ராஜலக்ஷ்மியையுடைவதற்குச் சாதனமாவனவும், அரசர்கள் யாவராலும் கொண்

டாடத்தக்கனவும், பெருமைபொருந்திய காம்போஜநாட்டிற் பிறந் தனவும் நற்குணங்களையுடையனவும், காற்றைப்போன்ற வேக முடையனவும், போரில் வன்மையுடையனவும் ஆன பல்லாயிரம் புரவிகளைத் தங்களுக்கு நான் உடனே கொடுக்கிறேன்.

இந்திரன்:—'குதிரை' (யென்று) சற்றுநேரம் எறுகிறேன். கர்ண! வேண்டா; வேண்டா.

கர்ணன்:—தாங்கள் விரும்பவில்லையா? மற்றொன்றையும் கேட்பீர்களாக.

𑌮𑌦𑌸𑍍𑌰𑍁𑌤𑌕𑌟𑌘𑌟𑌂 𑌷𑌟𑍍𑌪𑌦𑍈𑌃 𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌂
𑌗𑌿𑌰𑌿𑌵𑌰𑌨𑌿𑌭𑌕𑌾𑌯𑌂 𑌮𑍇𑌘𑌗𑌂𑌭𑍀𑌰𑌘𑍋𑌷𑌂 ।
𑌸𑌿𑌤𑌨𑌖𑌦𑌶𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌰𑌣𑌾𑌨𑌾𑌮𑌨𑍇𑌕𑌂
𑌰𑌿𑌪𑍁𑌬𑌲𑌵𑌿𑌮𑌰𑍍𑌦𑌂 𑌵𑍃𑌨𑍍𑌦𑌮𑍇𑌤𑌦𑍍𑌦𑌦𑌾𑌮𑌿 ॥

மதநீர்ப்பெருக்குடன்கூடிய கன்னங்களையுடையனவும் வண்டுகளால் மொய்க்கப்பட்டவையும், பெரியமலைபோன்றனவும் முகில்கள்போல் எழுச்சியுடன் முழங்குவனவும், வெள்ளிய நகங் ளும் பற்களும் உடையனவும், பகைவர்களைப் போரில் மிதித் நசுக்குபவைகளும் ஆன பல யானைக்கூட்டங்களைத் தங்களுக் நான் தருகிறேன்.

இந்திரன்:—யானையா? சற்றுநேரம் எறுகிறேன்; கர்ண வேண்டா, வேண்டா.

கர்ணன்:—தங்களுக்கு வேண்டாவா? மற்றொன்றையு கேட்கவேண்டும். அளவற்ற பொன்கொடுக்கிறேன்.

இந்திரன்:—எடுத்துப்போகிறேன். (சற்றுநடந்து) கர்ண வேண்டா; வேண்டா.

கர்ணன்:—ஆதலால், போரில் வென்று நாட்டைக் கொடு கிறேன்.

இந்திரன்:—பூமியைக்கொண்டு என்செய்வேன்?

கர்ணன்:—ஆதலால், யான்செய்த வேள்விகளின்பயனை தருகிறேன்.

இந்திரன்:—வேள்விகளின்பயனல் என்னசெய்யத்தக்கது?

கர்ணன்:—ஆதலால் என் தலையைக் கொய்துகொடுக்கிறேன்.

இந்திரன்:—ஐயோ! ஐயோ!

கர்ணன்:-பயப்படவேண்டா; மற்றொன்றையும்கேட்பீர்களாக.

𑌅𑌙𑍍𑌗𑍈𑌃 𑌸𑌹𑍈𑌵 𑌜𑌨𑌿𑌤𑌂 𑌮𑌮 𑌦𑍇𑌹𑌰𑌕𑍍𑌷𑌾
𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑍈𑌰𑌪𑌿 𑌨𑌭𑍇𑌦𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 ।
𑌦𑍇𑌯𑌂 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌕𑌵𑌚𑌂 𑌸𑌹𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌂
𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌮𑌯𑌾 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌰𑍁𑌚𑌿𑌤𑌂 𑌯𑌦𑌿 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

என்உடலுக்குக் காப்பாக, என் அங்கங்களுடன்பிறந்து அஸ்திரங்களைக் கொண்டவர்களான தேவாசுரர்களாலும் சிதைக்கமுடியாததாயுள்ள கவசத்தையும் குண்டலங்களையும் உவப்புடன் கொடுக்கக்கூடும். பகவான் விரும்பினல் கொடுக்கிறேன்.

இந்திரன்:—(களிப்புடன்) கொடுக்கலாம், கொடுக்கலாம்.

கர்ணன்:—(தனக்குள்) இவருக்கு இதுதான் விருப்பம். இது, மிகவும் வஞ்சமதியினனை கண்ணன் சூழ்ச்சியோ? அப்படியிருந்தாலும் சரி. அதைப்பற்றி வருந்துவது தக்கதன்று. அதில் ஐயமொன்றுமில்லை. (வெளிப்படையாய்) பெற்றுக்கொள்வீர்களாக.

சல்லியன்:—அங்கராஜரே! கொடுக்கவேண்டா. கொடுக்கவேண்டா.

கர்ணன்:—சல்லியராஜரே! என்னைத் தடுக்கவேண்டா. பார்ப்பீர்களாக.

𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑍍𑌷𑌯𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌕𑌾𑌲𑌪𑌰𑍍𑌯𑌯𑌾𑌤𑍍
𑌸𑍁𑌬𑌦𑍍𑌧𑌮𑍂𑌲𑌾 𑌨𑌿𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌦𑌪𑌾𑌃 ।
𑌜𑌲𑌂 𑌜𑌲𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌂 𑌚 𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿
𑌹𑍁𑌤𑌂 𑌚 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌤𑌥𑍈𑌵 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥

நாட்கள் செல்லச்செல்லக் கற்ற கல்வியும் குறைபடுகிறது; நன்றாக வேரூன்றிய மரங்களும் வீழ்கின்றன; நீர்நிலையிலிருக்கிற புனலும் வற்றிவிடுகிறது; ஆனல், வேள்வியும் ஈகையும் நிலைத்து நிற்கின்றன.

ஆதலால் பெற்றுக்கொள்வீர்களாக. (சரீரத்திலிருந்து அறுத்துக் கொடுத்தல்.)

இந்திரன்:—(பெற்றுக்கொண்டு மனத்துள்) விஜயனுக்கு வெற்றி கிடைப்பதற்காகத் தேவர்கள் கேட்டுக்கொண்டபடி நான் செய்து விட்டேன்; ஆதலால் நானும் ஐராவதத்தில் ஏறிக்கொண்டு, அர்ஜுனனும் கர்ணனும் புரிகிற போரைப் பார்க்கிறேன். (வெளியேறுதல்)

சல்லியன்:—அங்கராஜரே! தாங்கள் வஞ்சிக்கப்பட்டீர்கள்.

கர்ணன்:—யாரால்?

சல்லியன்:—இந்திரனால்.

கர்ணன்:—இல்லை, இல்லை; தேவராஜரன்றோ என்னால் வஞ்சிக்கப்பட்டார்.

அநேகயஜ்ஞாஹூதிதர்பிதோ த்விஜை:
கிரீடிநோ யா நவஸம்வர்த்தித:।
ஸுராதிபாஹ்ஸுர ஸைந்யஸூதந:
கஜேந்த்ரகாமீ வசயா வாசஸாகத:॥

பல வேள்விகளில் அந்தணர்கள் அளித்த அவிகளால் உவட்பிக்கப்பட்டவராயும் அருச்சுனனைத் துணையாகக்கொண்டவராயும் அசுரர்கூட்டத்தை அழிப்பவராயும் அயிராவதத்தை ஊர்பவராயும் உள்ள தேவராஜரன்றோ என்னால் பேறுபெற்றவராகச் செய்யப்பட்டார்.

தேவதூதன்.—(பார்ப்பனவுருவத்துடன் அரங்கிற்புக்கு) ஓ! "கவச குண்டலத்தைக் கவர்ந்துவிட்டேனே" என்று கழிவிரக்கமுற்ற இந்திரனால் அருள்புரியப்பெற்றாய். பாண்டவர்க்குள் ஒருவனைக் கொல்லத்தக்கதும் தவறாததுமான "விமலை"யென்ற வேலாயுதப் இது. பெற்றுக்கொள்வாயாக.

கர்ணன்:—சீ! கொடுத்ததைத் திருப்பி வாங்கேன்.

தேவதூதன்:—அப்படியன்று; அந்தணன்கட்டளை; பெற்றுக் கொள்வாயாக.

கர்ணன்:—அந்தணருடைய கட்டளையா? என்றால் ஒருகாலும் அது மறுக்கப்படாதது; எப்பொழுது கிட்டும்?

தேவதூதன்:—எப்பொழுது நினைக்கிறாயோ அப்பொழுது கிட்டும்.

கர்ணன்:—நல்லது. அருள்புரியப்பெற்றேன். தாங்கள் திரும்பிச்செல்லலாம்.

தேவதூதன்:—நல்லது; (வெளியேறுதல்).

கர்ணன்:—சல்லியராஜரே! இனி இரதத்தில் ஏறுவோம்.

சல்லியன்:—நல்லது.

(இருவரும் இரதத்தில் ஏறுவதுபோல் நடித்தல்.)

கர்ணன்:—ஓ! ஆரவாரம் கேட்கப்படுகிறதே! இது என்ன?

𑌶𑌙𑍍𑌖𑌧𑍍𑌵𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌸𑌾𑌗𑌰𑌘𑍋𑌷𑌤𑍁𑌲𑍍𑌯𑌃
𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌨 𑌤𑍁 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌸 𑌤𑍁 𑌫𑌲𑍍𑌗𑍁𑌨𑌸𑍍𑌯 ।
𑌨𑍂𑌨𑌂 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌪𑌰𑌾𑌜𑌯𑌕𑍋𑌪𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾
𑌪𑌾𑌰𑍍𑌥𑌃 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌯𑌥𑌾𑌬𑌲𑌮𑌦𑍍𑌯 𑌯𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

ஊழிகாலத்துக் கடல்முழக்கம்போற் கேட்கப்படுகிற சங்கநாதமானது கண்ணனுடையதா? அன்று; அருச்சுனனுடையதே. யுதிஷ்டிரன் தோல்வியுற்றதால், சினமடைந்தவனான பார்த்தன் முழுவலிமையுடன் இன்று போர்புரிவான்.

சல்லியராஜனே! இந்த அருச்சுனன் எங்கே இருக்கிறானே, அங்கேயே என் இரதத்தை நடத்துவீராக.

சல்லியன்:—நல்லது.

பரதவாக்கியம்.

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑍍𑌪𑌦𑌃 𑌸𑌨𑍍𑌤𑍁 𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌿𑌪𑌦𑌃 𑌸𑌦𑌾 ।
𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌜𑌗𑍁𑌣𑍋𑌪𑍇𑌤𑍋 𑌭𑍂𑌮𑌿𑌮𑍇𑌕𑌃 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨𑌃 ॥

எங்கும் செல்வம் சிறக்க; எப்போதும் துன்பம் ஒழிக; நம் அரசன் நற்குணங்கள் உள்ளவனாய்ப் பூமியை ஒருவனாகவே ஆள்வானாக.

கர்ணபாரம் முற்றிற்று.

கம்பராமாயணசாரம்.

[ரு-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

[தேவரும் அசுரரும் அமிர்தம் உண்டாதல்கருதிக் கடலைக் கடைந்தபோது, ஆலகாலவிடம் உண்டாக, அவர்கள் அஞ்சி 'அபயம்' என்றபோது, 'அஞ்சாதீர்கள்' என்று அவர்களுக்கு அபயம் அளித்து அவ் விடத்தைத் தான் உண்டு அவர்களைக் காத்த சிவபிரான்செயலை அறியீரோ? ஒருவன், 'உடைந்தவர்க் குதவா னுயி னுள்ளதொன் றீயானுயின் அடைந்தவர்க் கருளா னுயி னறமென்னு மாண்மை யென்னும்']

(உடைந்தவர் - எளிமைப்பட்டவர். என்னும் - என்ன பயன்படும்.)

20 பேடையைப் பிடித்துத்[1] தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்வான் விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த[2] பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்றே[3]

கொண்டுகூட்டு: பேடையைப் பிடித்துத் தன்னை(யும்) பிடிக்க வந் தடைந்த பேதைவேடனுக்கு உதவிசெய்வான் விறகிடை வெந்தீ மூட்டி (அவன்) பாடு உறு பசியைநோக்கித் தன் உடலை (உண்ணக்)கொடுத்த பைம் புள் வீடுபெற்றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிதன்றே?

பொருள்: தன்பெட்டையைப் பிடித்துத் தன்னையும் பிடிக்க வந்த அறிவில்லாத வேடனுக்கு உதவிசெய்யும்பொருட்டு (அவன் குளிர்காய்தற்கு ஒரு கொள்ளிக்கொம்பைக் கொண்டுவந்து போகட் டுப் பக்கத்திற்கிடந்த) விறகில் நெருப்பைமூட்டி அவன் பசியினால் வருந்துதல்கண்டு (அவன் பசியைத்தீர்க்க) அத்தீயில் தான் விழுந்து தன் உடலை (அவன் உண்ணும்படி) கொடுத்த ஆண்புறு (தன் அரிய தியாகத்தினால்) மோட்சமடைந்தவரலாறு வேதத்தினும் சிறப்புடையதன்றோ?

பேடை - பெட்டை - பறவையின்பெண்பால். பேதை - அறிவில்லான். பாடு - வருத்தம்; பெருமை. பாடு உறு பசி - பெரும்பசி; வருத்தம் உறச் செய்யும் பசி. பை - இளமை; அழகு. புள் - பறவை. பைம்புள் - இளமைப் பருவமுள்ள பறவை; அழகுள்ள பறவை.

'இன்ன நல்வினையைச் செய், அதனால் இன்ன நற்பயனை அடைவை' என்று வார்த்தையாற் போதிப்பதைக்காட்டிலும், அந் நல்வினையைச்செய்து அதன் நற்பயனை அடையுஞ் செய்கையாற் போதிப்பது சிறந்தமுறை என்பது தெளிவாம்.* உதவிசெய்தவர் நற்கதியடைவாரென்று விதிக்கும் வேதத்திலும் உதவிசெய்து நற்கதியடைந்த புறுவின்வரலாறு சிறந்ததென்றான்.

'ஓர் அற்பப்பிராணியாகிய புறுவே, தன்னிடத்து அடைந்தது காரணமாகத் தன்மனைவியைச் சிறைப்பிடித்துக்கொண்டிருப்பதை யும் பாராட்டாமல் தன்னையும் பிடிக்கக்கூடிய வேடனொருவனுக்கு உதவிசெய்ததென்றால், பேரறிவுள்ளவரென்று பேர்வைத்துக் கொண்டிருக்கிற நாம், நமக்கு யாதொருதீங்குஞ் செய்யாமல் நம் மைச் சரணமென்று அடைந்துள்ள இவனை 'ஒருகால் நமது உயிர்க்கு ஏதேனும் தீங்குநேருமோ?' என்று அஞ்சிக் காவாது கைவிடுதல் தகுதியோ? தகாது: சரணமடைந்தவனை எப்படியிருந் தாலும் காத்தலே முறையாகும்' வை. மு. கோ.

பாடபேதம்: [1] படுத்து. [2] துறந்த. [3] என்றான்.

21 சரணெனக் கியார்கோ லென்று சானகி யழுது சாம்ப
அரணுனக் காவன் வஞ்சி யஞ்சலென் றருளி னெய்தி
முரணுடைக் கொடியோன் கொல்ல மொய்யமர் முடித்துத் தெய்வ[1]
மரணமென் றதை[2] பெற்ற தென்வயின் வழக்கன் றாமோ.

கொண்டுகூட்டு: சானகி 'எனக்குச் சரண் யார்கொல்?' என்று அழுது சாம்ப, 'வஞ்சி! (யான்) உனக்கு அரண் ஆவன்; அஞ்சல்' என்று அருளின் எய்தி, முரண் உடைக் கொடியோனுடன் மொய் அமர் முடித்து (அவன்) கொல்லத் தெய்வமரணம் என்தாதை பெற்றது என்வயின் வழக் கன்றாமோ?

பொருள்: (இராவணனால் தூக்கிக்கொண்டுபோகப்பட்ட) சீதை 'எனக்குக் காப்பு ஆவார் யார்' (இருக்கின்றார்? ஒருவரு மில்லையே!) என்று கதறி அழுது வாட, 'யான் உன்னைக்காப்பேன்' என்று (அபயங்) கூறி வந்து (அந்தக்) கொடிய இராவணனோடு போர்புரிந்து அக்கொடியோன் கொல்லத் தெய்வீகமரணமடைந்த என் பெரியதந்தை சடாயு (போல, நானும் பிறர்க்குதவப்) பெறும் பேறுபெறுதல் முறைமையாகாதுபோமோ?

---

* Example is better than precept.

சர்ண் - சர்ணம் - புகலிடம். சாய்புதல் - வாடுதல். அரண், அரணம் - காவல். வஞ்சி - கொடி (போன்ற சீதை). அஞ்சல் - பயப்படாதே. முரண் - வலிமை - முருட்டுக்குணம் ('முரட்டு'க்குணம்). மொய் அமர் - நெருங்கிய போர். தெய்வ மரணம் - தெய்வீக மரணம் - சிறந்த சாவு.

பாடபேதம்: [1] முடித்த தெந்தை. [2] மரணமப் பெரியோன்.

இராமன், 'விபீடணனை அழைத்துவா' எனச் சுக்கிரீவன் போதல்

[அடைக்கலமடைந்தவனைக் காத்தலினும் சிறந்த தருமம் ஒன்றுமில்லை. யாவனாயினும் ஒருவன் 'அபயம்' என்ற உடனே, அபயம் அளித்தல் கடப்பாடானது. அதனை நீங்கள் அறியீரல்லீர்; ஆயினும், என்பால் உங்களுக்குள்ள அன்புமிகுதியால் எனக்கு அபாயம்வருமோவென்று அஞ்சி இவனுக்கு அபயம் அளிக்கக் கூடாதென்றீர்கள். இனி, ஆலோசிக்கவேண்டியதில்லை. 'சுக்கிரீவ ராசனே! நீயே போய், விபீடணனைக் கூட்டிவா' என்றான்.

சுக்கிரீவன், இராமனது அபயமளித்தலைப்பற்றிய போதனையால் விபீடணன்றிறத்தில் ஐயம் நீங்கி, இராமன்கருத்துடன் ஒருப்பட்ட கருத்தினனாகி அவனை அழைத்துவருவேனென்று சென்றான்.

விபீடணன் சுக்கிரீவனை எதிர்கொள்ளல்

சுக்கிரீவன் வரக்கண்டு, விபீடணனைக் காத்துநின்ற துமிந்தன் அவனை நோக்கி, 'இராமபிரான் உன்னை அழைத்துவரச்சொல்லியிருக்கிறான். உன்னை அழைத்துப்போகச் சுக்கிரீவமகாராசன் வருகிறான்' என, விபீடணன் மனமகிழ்ந்து சுக்கிரீவனை எதிர்கொண்டுசென்றான்.]

இருவரும் தழுவல்

22 தோல்பெருங்[1] கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார் பொருந்துவ[2] ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத்[3] தழுவின ரெழுவிற் றோளார்.

கொண்டுகூட்டு: தொல்பெருங் காலமெல்லாம் பழகினும் தூயரல்லார் உள்ளம் புல்லலர். தூயார் எதிர்ந்தஞான்றே பொருந்துவர். எழுவில்

தோளார் (ஆகிய சுக்கிரீவ விபீடணர்) ஒல்லை வந்து உணர்வும் ஒன்ற ஒரு நாள் உற்ற எல்லியும் பகலும் போல இருவரும் (ஒருவரையொருவர்) தழுவினர்.

பொருள்: பழமையான நீண்டகாலமெல்லாம் பழகியிருந்தாலும், களங்கமுடைய மனத்தினோர், மனவொருமையுறமாட்டார்கள். களங்கமில்லாத மனத்தினோர் எதிர்ப்பட்டபோதே மனம் ஒருப்பட்டுவிடுவார். (சுக்கிரீவ விபீடணர்) ஒருவரையொருவர் விரைவிற் சென்றடைந்து (இருவர் உடம்பும் ஒன்றுகூடியதுபோல) இருவர்மனமும் ஒருசேரக்கலக்க, ஒருநாளிலே (ஒருபாதியாகிய) பகலும் (மற்றொருபாதியாகிய) இரவும் (அந்திவேளையிற் சந்தித்து ஒன்றையொன்று) பொருந்தல்போல(ப் பகல்போல வெளுத்த சுக்கிரீவனும் இரவுபோலக் கறுத்த விபீடணனுமாகிய) இருவரும் (ஒருவரையொருவர்) தழுவினர்கள்.

தொல் - பழைய. தூயர் - பரிசுத்தர். புல்லல் - பொருந்தல். ஞான்று - காலம். (தமிழகராதி.) எழு இன் தோளார் - தூண்போன்ற தோள்களையுடையார்.

'சிறியோர்நட்பு நிலைத்துநிற்காதென்பதை, "நூறாண்டு பழகினும் மூர்க்கர்கேண்மை, நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே", "பெருகுவதுபோலத்தோன்றி வைத்தீப்போல், ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும்" என்ற இடங்களிலும், பெரியோர்நட்புக் கண்டமாத்திரத்தில் நிலைத்துண்டாகுமென்பதை, "ஒருநாட் பழகினும் பெரியோர்கேண்மை, இருநிலம் பிளக்க வேர்வீழ்க்குமே", "செல்வுழிக்கண் ணொருநாட் காணினுஞ் சான்றவர், தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்" "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான் - நட்பாங் கிழமை தரும்" என்ற இடங்களிலும் காண்க.' வை. மு. கோ.

பாடபேதம்: [1] சொல்லருங். [2] புல்லுவர். [3] என்ன.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(௩0-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாம் சம்நிதிய யுத்தம் கி. மு. 314—304

கி. மு. 314ல் உரோமர் தலையெடுத்துச் சம்நிதியநாட்டினுட் புகுந்தனர். கி. மு. 310ல் உரோமர் சில சிறுமரக்கலங்களின் உதவியால் கம்பெனியத்துறையில் கொள்ளைகொண்டனர். கி. மு. 308ல் உரோமர்தலைவன் டேசியஸ்முஸ் என்பான் வெற்றியடைந்தான்; முஸ்கேணிக்கியர் அவனுக்குத் துணைவராயினர். கி. மு. 304ல் சம்நிதியர் சமாதானமடைதற்கு உரோமரிடம் தூதுவரை அனுப்பினார்கள். போர்முடிவில் உரோமர் பல குடியேற்றநாடுகளை அடைந்தனர்.

மூன்றாம் சம்நிதிய யுத்தம் கி. மு. 298-290.

கி. மு. 298-ஆம் ஆண்டுத்தலைவர்கள், டேசியஸ்முஸ் என்போனும் றாவிலியஸ் என்போனும் ஆவர். டேசியஸ்முஸ், விருத்தர் வாலிபர் எல்லாரையும் சேர்த்து 60,000 படைவீரரோடு போர்க்குப் புறப்பட்டான். சம்நிதியர் கல்லியரின் துணைபெற்றார்கள். கல்லியரின்படைக்கு உரோமர் மிகவும் அஞ்சினார்களாயினும், உரோமர் வெற்றியடைந்தார்கள். கி. மு. 291-ல் உரோமர் தென் இத்தாலியாவிலும் வெனிசியாவிலும் வேறு பல இடங்களிலும் 25,000 குடிகளைக் குடியேற்றி ஆட்சிநாடுகளைக் காத்தார்கள். இவ்வண்ணம் உரோமர் கம்பெனியாநாட்டையும் சம்நிதியநாட்டையும் தமது ஆட்சிக்குட்படுத்தித் தென்னித்தாலியா முழுவதிலும் தமது ஆணையைச் செலுத்தத்தொடங்கினார்கள்.

கம்பேனியாநாட்டு வரலாறு.

கி. மு. 1040-ஆம் ஆண்டு யவனர் கம்பெனியாநாட்டிற் குடியேறினர்கள். அவர்களுடைய பிரதானபட்டணம் கூமாயி என்பது. இந்நகரிற் குடியேறிய யவனர், யவனதேசத்து யூபோயியாநாட்டினின்றும் போந்தனரெனப் பழங்கதைகள் கூறும். இக்கிரேக்கர் நாளடைவிற் பெருகிப் பாதினப்போலி, நீயாப்போலி என்னுமிடங்களிற் குடியேறினர்கள். கி. மு. 748-ஆம் ஆண்டு வேறோர் கிரேக்கக்கூட்டத்தினர் மெசினநீரிணையால் வந்து ரெசியம்நகரை அமைத்தார்கள். கி. மு. 710ல் வேறு கிரேக்கக்கூட்டத்தினர் குறோற்றோன, இராறந்தம், சிபாரிஸ் என்னும் நகரங்களை ஸ்தாபித்தார்கள். இக்கிரேக்கர் பெருகிப் பெற்றியால் பொசிடன் முதலிய இடங்களிற் குடியேறிச் சிறுநகரங்களை அமைத்தனர். ஸ்பாட்டா தேசத்துக் கிரேக்கவம்பர் இராறந்தத்திற் குடியேறினர்; அவர்கள் கேணிக்கியாவிலும் பரவினர். பார்சியரால் துறத்தப்பட்ட சின்னசியாக் கிரேக்கர் 683-ஆம் ஆண்டு லொக்கிரியிலும் 543-ஆம் ஆண்டு வேலியாவிலும் குடியேறினர். மேற்கூறிய சிபாரிஸ்நகரத்தார் பெருகி 441-ஆம் ஆண்டில் தூறியி என்னும் நகரத்தில் வசித்தனர். இத்தூறியரே 14000 வீரரையுடைய யவனராயின், இத்தாலியாநாட்டில் வசித்த கிரேக்கரின் செல்வத்தையும் வலியையும் கூறவும்வேண்டுமோ. நீர்வளம் நிலவளம் பொருந்திய இந்நாடுகளில் யவனர் குடியேறிப் பெருகியமையால் இக்குடியேற்றநாட்டார் தம்நாட்டைப் பெரிய கிரேக்கநாடென வழங்கினர். கி. மு. 500-ஆம் ஆண்டுவரையும் கிரேக்கர் பிறசாதிபாரொடு பகைபாமல் வாணிகம் கமம் முதலிய தொழில்களால் பொருளீட்டிச் சீவித்தார்கள். பின்னர் எற்றூறியக்கடற்கள்வராலும் பினீசியக்கடற்கள்வராலும் நனிவருத்தப்பட்டனர்; மேலும், சம்நிதியராலும் நெருக்கப்பட்டார்கள். கிரேக்கர் தம் கப்பற்படைவலியால் பினீசியரையும் எற்றூறியரையும் அடக்கினர்கள்; ஆயினும், சம்நிதியருக்குமிகவும் அஞ்சினர்கள். கி. மு. 420-ல் கூமாயிநகர் சம்நிதியர்வசமாயிற்று. இராறந்தம்

என்னும் கிரேக்கநகர் கத்திரியாட்டிக் கடற்பக்கத்துப்பட்டினங்களோடு பண்டமாற்றுச்செய்து செல்வமுற்று வளர்ந்தது.

கி. மு. 338ல் இராறந்தநகரக்கிரேக்கர் லுக்கேனியருக்கு எதிராகத் தம் தாய்நாட்டாராகிய யவனரிடம் துணைவேண்டினர். யவனதேசத்தில் எப்பிரஸ் என ஒரு சிறுநாடுண்டு. எப்பிரஸ்நாட்டு வேந்தன் அலேச்சாந்தர் என்பான் இராறந்தநகரத்தாருக்குத் துணை புரிந்தான். இவ்வலேச்சாந்தர் யவனமன்னருட் புகழ்பெற்ற பெரிய அலேச்சாந்தரின் மாமன். இரண்டாம்சம்நிதியயுத்தத்தில் இராறந்தநகரத்தார் சம்நிதியரோடு பகையாமலும் உரோமருக்கு உதவி செய்யாமலும் நொதுமலராயிருந்தனர்.

கி. மு. 285-ல் லுக்கேனியர் தூறியநகரத்தைத் தாக்கினர். அஞ்ஞான்று, கல்லியரும் எற்றூறியரும் சம்நிதியரும் இராறந்தநகரத்தாரும் ஒருங்குசேர்ந்து உரோமருக்குப் பகைவராக எழுந்தனர். உரோமர் முதன்முதற் கல்லியரை அடக்கினார்கள். கல்லியர் முதலிற் செந்தினக்களத்தில் தோல்வியடைந்தாலும் பத்தாண்டு கழிந்தபின் பின்னரும் போருக்கு எழுந்து உரோமருடைய குடியேற்றநகராகிய அரற்றியத்தைக் கைப்பற்றினர். லகோணிவியஸ் என்பான் டலபெல்லாபோநதியைக் கடந்து கல்லியநாடு புகுந்து கல்லியரை அடியோடு அழித்தான். உரோமர், செனோனிய கல்லியரில் ஆடவரைக் கொன்று பெண்களையும் குழந்தைகளையும் அடிமைகளாக்கினர். அத்தருணத்தில் போயியென்னும் கல்லியர் உரோமர்மேற் படையெடுத்துச்சென்று வாடிமோவாவிக்கரையில் தோற்றார்கள். கி மு. 298-ஆம் ஆண்டுதொடங்கி 282-ஆம் ஆண்டுவரையும் நடத்திய போரில் உரோமர் கல்லியரைச் செயித்தார்கள். கல்லியரை உரோமர் அடக்க, இராறந்தநகரினர் உரோமருடைய பகைத்திறந்தெரியாமற் சோம்பியிருந்தனர். கல்லியயுத்தம் முடிந்தபின் உரோமர் கிரேக்கநகரங்களைக் கைப்பற்ற முயன்றனர்; கி. மு. 282-ல் லொக்கிரி, குரோற்றோனு, ரெகியம்

முதலிய நகரங்களை அடக்கியும் இராறந்தத்தைத் தப்பவிட்டார்கள். இராறந்தத்து வணிகர் உரோமராட்சியே தாம் பொருளீட்டற்குத் துணையாகுமென எண்ணி உரோமரிடம் நகரை ஒப்புவிக்க முயன்றனர்; இஃதறிந்த ஒற்றர்கள் நகரத்தலைவர்கட்கு அறிவித்தனர்; தலைவர்கள் துறையில் நின்ற உரோமருடைய கப்பல்களைக் கைப்பற்றி உரோமருக்கு எதிராகப் போர்முரசறைந்து பிரஸ்வேந்தனிடம் துணைவேண்டினார்கள்.

பிரஸ்வேந்தன்.

பிரஸ்வேந்தன்தந்தையாகிய அயாசிடிஸ் என்பான் தன் மைத்துனனான மகாவீரன் அலெச்சாந்தருக்குத் திறைகொடுத்து எப்பிரஸ் நாட்டை ஆண்டான். அயாஸிடிஸ் ஒரு போரில் மடியப், பிரஸ் என்பான் சிறுவனாயிருந்தமையால் குளோக்கஸ் என்னும் ஒரு சுற்றத்தானிடம் வளர்ந்தான். சின்னாசியாவில் அந்திக்கோனஸ் என்னும் வேந்தன்மகன் பொலியாக்கிரேற்றிஸ் என்பான், பிரஸ் என்பானுடைய சகோதரியை மணஞ்செய்தானாக, பிரஸ் என்பான் சின்னாசியாவுக்குப் போனான். கி. மு. 310-ல் எகிப்துவேந்தன் தொலமி என்பான் அந்திக்கோனைக் கொன்று வெற்றிப்பறை கொட்டியதன்றிப் பிரஸ் என்போனையும் அலெச்சாந்திரியாநகரிற் சிறையிட்டான். பிரஸ் என்னும் வீரன் மிக்க அழகனாகையால், தொலமியின் மனைவியருள், கண்ணோட்டமுள்ள பெரினீசி என்பாள் கருணைகூர்ந்து அவனைச் சிறைவீடுசெய்து தொலமியின் மகள் அந்திக்கோனாவுக்கு மணாளனாக்கினாள். அவன் தொலமியிடம் பொருளுதவியும் படையுதவியும் பெற்று எப்பிரஸ்நாடடைந்து தனது அரசுரிமையைப்பெற்றான். கி. மு. 296-ஆம் ஆண்டில் பிரஸ்வேந்தன் செங்கோல்செலுத்தத்தொடங்கிப் படைமாட்சியால் கி. மு. 287-ஆம் ஆண்டு மசிடோனியாதேசத்தையும் கைப்பற்றி ஆறுதிங்கள் ஆண்டான். அதன்பின் ஐந்துவருடம் சோம்பியிருந்து காலத்தைக் கழித்தான். அவன் கீழ்த்திசையை அடக்கவியலாதென்றெண்ணி மேற்றிசையைநோக்கினானதலால், அவன் இராறந்தநகரத்தாரனுப்பிய தூதுவரை வரவேற்று உரோமருக்கெதிராக இராறந்தநகரத்தார்க்குத் துணைபுரிய உடன்பட்டான்.

பிரஸ் 3000 வீரரை மைலோவின் தலைமையில் அனுப்பினான். கி. மு. 281-ல் 25,000 கிரேக்கவீரரோடு பிரஸ் இராறந்தநகரத் துறையில் இறங்கி அந்தநகரத்திலுள்ள உரோமர்களைவென்று அங்கே தன் பாசறையை அமைத்தான். வலேறியஸ் இலேவீனஸ் என்னும் உரோமர்தலைவன் 50,000 படையாளரோடு அவனை எதிர்த்தான். ஹெராக்கினியாநகரைக் காத்தற்காகப் பிரஸ் சிரஸ் அருவித்தடத்து நின்றான். இலேவீனஸ் அருவிகடந்து தன் புரவிப்படையால் கிரேக்கப் புரவிப்படையைக் கலைத்தான். உரோமர் காலாட்படை கிரேக்கர்காலாட்படையை ஏழுமுறை தாக்கியும், கிரேக்கர்காலாட்படை அசையவில்லை. பிரஸ் தன் யானைப்படையால் உரோமருடைய புரவிப்படையை ஓட்டியதன்றி அவருடைய காலாட்படையையும் அழித்தான். கிரேக்கர்சேனையில் 4000 வீரரும் உரோமர்சேனையில் 7,000 வீரரும் மாண்டனர். உரோமர் தலைவன் இலேவீனஸ் தோல்வியுற்ற தன்படையோடு வெனிசியாவில் தங்கினான். இப்போரில் பிரஸ் வெற்றியடைந்தாலும் உரோமருடைய படைத்திறமறிந்து சமாதானம்பேசும்படி தன் அமைச்சன் சினியாஸ் என்போனைத் தூதனுப்பினான். அப்பியஸ் குளோடியஸ் என்பான் வயதுமுதிர்ந்து கண்பார்வைகெட்டும் பழைய ஊக்கத்தோடு மேன்மக்கட்சபையேறி யுத்தத்தைத் தொடரவேண்டுமெனச் சொற்பொழிவுசெய்து தூண்டினான். பிரஸ் உரோமாபுரத்தையணுகி 37 மயில்தூரத்தில் நின்றும் இத்தாலியரது துணைபெறாமையால் இராறந்தநகரத்திற்குத் திரும்பினான். இதற்கிடையில் உரோமர் எற்றூறியரை அடக்கினார்கள். கி. மு. 281-ல் அக்குவியத்தில் டேசியஸ்முஸ் என்பவனுடைய மகனைத் தலைவனாகக்கொண்ட 80,000 உரோமர் 80,000 கிரேக்கரோடு பொருதார்கள். இரண்டுநாள் போர்நிகழ்ந்தது. அப் போரிலும் யானைப் படையின் வலிமையால் பிரஸ் வெற்றியடைந்தான். ஆயினும், அப் போரில் 3,000 வீரரைப் பிரஸ் இழந்தான். பின்னர் மடிகாரணமாகவோ எப்பிறஸ்நாட்டு உட்கலகத்தின்காரணமாகவோ பிரஸ் இராறந்தநகரத்திற் காலங்கழித்தான். அக்காலத்திற் சிசிலித்தீவினரான கிரேக்கர் அந்நாட்டுக்கு அதிபனாகும்படி பிரஸ் என்பானை வேண்டினார்கள். சிசிலித்தீவின் மேற்குப்பாகத்தில்

இருந்த காதாக்கினியர் கிழக்குப்பாகத்திலிருந்த கிரேக்கரை நெருக்கித் தீவுமுழுவதையும் வௌவக்கருதினார்கள். சிறக்கூசாப் பட்டினத்துக் கொடுங்கோன்மன்னன் அகதோக்கிள்ஸ் காதாக்கினியரை எதிர்த்தான். பிரஸ் அகதோக்கிள்ஸ்வேந்தன்மகளை விவாகஞ் செய்துகொண்டமையால், கிரேக்கர்யாவரும் பிரஸ்வேந்தன் உதவிபெற்றுக் காதாக்கினியரை வெல்லலாமென எண்ணினார்கள். இத்தாலிதேசத்துக் கிரேக்கர் முழுமனத்தோடு உதவி புரியாமையால் பிரஸ் என்பான் இாறந்தநகரத்தினர் துணை வேண்டவும் மறுத்துச் சிசிலித்தீவுக்குச்சென்றான்.

சிசிலித்தீவின் பழங்குடிகள்.

வரலாற்றுக்காலத்துக்குமுன் சிசிலித்தீவில் வாழ்ந்த மக்கள் இத்தாலியாதேசத்துப் பழங்குடிகளின் ஒரு கிளையினராதல்கூடும். சிசிலித்தீவின் மேற்குப்பகுதிகளில் சிக்கானியரும் கிழக்குப்பகுதியில் சிக்கூலியரும் வடமேற்குப்பகுதியில் எலிமியரும் வசித்தார்கள். இவர்கள் எங்கிருந்து சிசிலியிற் குடியேறினார்கள் எனத் தெரியவில்லை. எலிமியர் தாம் உரோமகுலமென நம்பினர். சிலர் சிசிலித்தீவின் பழங்குடிகளைச் சாடினித்தீவிலிருந்து வந்தனரென்றும் சிலர் இத்தாலியாதேசத்திலிருந்துவந்தனரென்றும் துணிகின்றனர். கிறிஸ்துபிறப்பதற்குப் பலநூற்றாண்டுகளுக்குமுன் வந்தேறிய கிரேக்கருக்கே சிசிலித்தீவின் பழங்குடிகள் யாவரெனத் தெரியாது. சிக்கானியரை ஐபீரியக்குடாநாட்டாரென ஆசிரியர் தூசிடிஸ் கூறுகின்றனர். ஆப்பிரிக்காகண்டத்து மேற்குப்பாகமாகிய லிபியா நாட்டுக் காதாக்பட்டினத்துப் பினீசியர் சிசிலியரோடு வியாபாரஞ் செய்து மொத்தி, பனாமஸ், சோலி என்னும் துறைகளில் உறைந்தனர். மேற்குப்பாகங்களிற் பினீசியரும் கிழக்குப்பாகங்களிற் கிரேக்கரும் குடியேறினார்கள்.

[தொடரும்.]

பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சரிதம்.

[கசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

9. அருந்தமிழ் முருகனே இவர்க்கு ஞானாசிரியனானதும் அவனருளாலே இவர் கவிபாடியதும்.

'பாடவந்தால் பரமனைப்பாடு' 'குழறிக்குழறிக் குமரனைப்பாடு' என்னும் பழமொழிகளின்படி மாம்பழக்கவிராயர், தம் ஆன்மநாயகனும் வழிபடுதெய்வமும் ஞானாசிரியனுமாகிய பழநியம்பதித் தண்டபாணிமீது குழைந்த அன்பும் முதிர்ந்த பத்தியும் மிக, இனிய சொற்றொடர்களால் 'குமரகுருபதிகம்', 'செந்திற்பதிகம்', 'சிவகிரிப்பதிகம்', 'பழநிப்பதிகம்' என்னும் நான்கு பாமாலைகளைத் தமிழ் மணங்கமழ இனிதுறத்தொடுத்து, அண்ணலறுமுகன் பன்னிரு புயத்தும் அழகுறச் சூட்டினர். கன்னித்தமிழில் இன்னிசை பொலியப் பாடிய அக் கவின்பெறுபதிகங்கள், ஆற்றொழுக்கும் எளியநடையும் சொல்லடுக்கும் பொருளாழமும் அமைந்து, இன்சுவையும் அந்தமிகு சந்தமும் மிகுந்து, கற்போர்—கேட்போர் உள்ளத்தையுருக்கிப் பத்திவெள்ளத்தில் ஆழ்த்துந்தன்மையனவாயிருக்கின்றன. அப்பதிகங்களிலிருந்து ஒவ்வொருபாடலை அன்பர்கள் சுவைத்தின்புறுதற்கு மாதிரியாக இதன்கீழ்த் தருகின்றோம்.

குமரகுருபதிகம்—ஆசிரியவிருத்தம்.

"மாறாத பேராசை வேரோடி நீள்பாச
வனமதின் முளைத்தெழுந்து
வளர்பெண்டு பிள்ளைகளெனுங்கவர் விரித்தறிவு
வண்டமைழகளைச்சொரிந்து

வேறான சுற்றமாம் பறவைக் குழாங்கட்கு
மேவுமிட மாகிநின்று
வெய்யகா மாதிமலர் விரவியுறு பாவநறை
வீசிமத மாங்கனிபழுத்

தாருத கவலைப்ர சண்டவெங் காற்றினு
லலையுமிவ் வாழ்வாமர
மதுகூற்றெ னுந்தச்ச ஞர்கைப்ப டாமுன்ன
மடியிணை யளித்தென்னையாள்
சேருடு குங்குமக் களபமணி பூண்முலைத்
தெய்வகுஞ் சரிமணுளா!
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமாரகுருவே"

திருச்செந்திற்பதிகம்—அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வேற்றுமையினுற்றுறைகள்சாற்றுதுணிவாற்றுணைநின்மெய்த்தாட்கேதொண்
டாற்றுபவ ரீற்றுவரு கூற்றுவலி மாற்றுவர்தெள் ளமுத தாரை
யூற்றுகதிர் தூற்றுசிறு கீற்றுமதி தோற்றுசடை யுடையோர் பாலா!
தேற்றுபொரு ளேற்றுவினை பாற்றுதவர் போற்றுதிருச் செந்திலானே.

சிவகிரிப்பதிகம்—பதினுன்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

"மதிவலர் போலே முதிருரை யாலே
மாத்திரம் பிதற்றிமேன் மேலே
வஞ்சக விதமு நெஞ்சக மதமு
மன்னினே னலதுனை நிதமுந்
துதிபுரி கிலனே கதியெனு நிலனே
தோய்வதெங் ஙனமினி நலனே
தொடர்துணி பேற்றி யிடர்பிணி மாற்றிச்
சுகங்கொடுத் தருண்மலர் தூற்றி
விதிமுனி வாரு நிதிவளர் சுராரு
மேதகு வித்தியா தராரு
மிகப்பணி பாதா! மகத்துவ வேதா
வெஞ்சிறை விடுத்தமெய்ப் போதா!
வதிர்திரை செழிக்கும் பொதியிருள் கழிக்கு
மணிநவ மணிநிரை கொழிக்கு
மருவிகள் பலசூழ் தருசிவ கிரிவாழ்
ஐயனே! தெய்வநா யகனே!"

பழநிப்பதிகம்—ஆசிரியவிருத்தம்.

"மணிகொண்ட கனகதட மகுடபந் தியுமெழில்
வயங்குசண் முககமலமும்
வளர்கருணை பொழிவிழியு மிளநகையு முதுமறையின்
மதுவொழுகு குமுதவாயுந்
திணிகொண்ட பனிரண்டு தோளுமெந் நாளுஞ்
சிலம்பொலி யலம்புதாளுந்
திரள்புனித காமுமக லாமுமிகு கவசமுஞ்
சேவற் பெருந்துவசமுங்
கணிகொண்ட வயிலுநட மயிலுமணி வெயிலுமிரு
கன்னியர்க டுன்னுமொயிலுங்
கண்டுமன மண்டுதுயர் விண்டுனது தொண்டனேன்
கனிவினெடு பணியவருள்வாய்
பணிகொண்ட கண்டகர் பயங்கொண்ட வண்டரைப்
பரிவுகொண் டாண்டதேவே!
பழகுமங் களகீத முழவுகண் டுயிலாத
பழநியம் பதிநாதனே"

மேற்குறித்த பதிகங்களுள்ளும் வேறு பிரபந்தங்களிலும் பிரபுக்கள்மீது பாடிய சீட்டுக்கவிகளிலும் மாம்பழக்கவிராயர், முத்தமிழ்விரகராகிய முருகப்பிரானே தமக்கு ஞானாசிரியனென்றும், கவிபாடும் தமிழறிவு அவனருணோக்கத்தாலேயே தமக்கு வாய்த்ததென்றும் குறித்துள்ளார். அச்சொற்றொடர்கள்—

'தண்டாயுதக்குமரதேசிகன்' 'கடம்பணிபுயக் குமரகுரு'
'சடாநநாம்போஜ குகசற்குரு' 'தண்டாயுதக் குமரகுருசாமி'
'சண்டப்பிர சண்டதண் டாயுத சடாட்சர தயாநிதி யருட்பிரசாதம்'
'சகலவித புவனர க்ஷாபரண சண்முக தயாநிதி வரப்ரசாதம்'
'திடநடன மயிலில்வரு சிவசயில குமரகுரு திவ்யகரு ணாவிலாசம்'
'தடகரட கடவிகட சமரகஜ குமரகுரு சரணமகு டாதிபத்யம்'
'தடமகுட விபுதர்பணி சரணசிவ குமரகுரு தனதுகரு ணாவிலாசம்'
'தடமகுட மகரகுண் டலதிட சடாநந தயாநிதி தியானபுனிதம்'
'தடகிரண மணிமகுட சரவண பவாநந்த சண்முக னருட்பிரவாகம்'
'திருவுலவு சிவகிரித் தெண்டா யுதக்குமர தேசிகன் பதசேகரம்'

என்பன.

இவை மேற்குறித்தவற்றிற்குப் போதியசான்றும். முருகன் அருள்பெற்றவர்கள், தமிழகத்தில் 'வரகவிகள்' எனப் பெயர் சிறந்து விளங்கினர். இதற்கு அகத்தியர், நக்கீரர், பொய்யாமொழிப் புலவர், அருணகிரிநாதர், குமரகுருபரர், சிதம்பரசுவாமிகள், கச்சியப்ப சிவாசாரியர், கவிகுஞ்சரபாரதி, திருவாமாத்தூர்த் தண்டபாணி சுவாமிகள் முதலிய புலவர்பெருமக்கள் சான்றுவர்.

மாம்பழப்புலவர், கன்னித்தமிழ்கொண்டு கந்தவேள்மீது பிரபந்தங்கள் பாடியபிறகு 'ஆசு - மதுரம் - சித்திரம்-வித்தாரம்' என்னும் நால்வகைக்கவிகளையும் நலனுறப்பாடுதற்கு மிகமுயன்று வெற்றிகொண்டு அவற்றிலும்வல்லாரெனப் பெயர்சிறந்தனர். அன்றியும்,

வெண்பா.

மூச்சு விடுமுன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்று லந்நூறு மாகாதோ?—பேச்சென்ன!
வெள்ளைக் கவிக்காள மேகமே! யுன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.

என்று கவிமழைபொழியும் காளமேகக்கவிராயரையும் பொருட்படுத்தாது வீரவாதம்பேசிய திருக்கோவலூர் அதிமதுரகவிராயரைப்போலவும்,

வெண்பா.

'இம்மென்னு முன்னே யெழுநூறும் எண்ணூறும்
அம்மென்று லாயிரம்பாட் டாகாதோ—சும்மா
விருந்தா விருந்தேன் எழுந்தேனே யானல்
பெருந்தாரை மேகம் பிளாய்'.

என்று, அதிமதுரகவிராயர் அஞ்சித் துணுக்குறும்படிகூறிய காளமேகப்புலவரைப்போலவும், இவர் இசைக்கவியுடன் வினைக்கவிகளுக்கு விடையிறுக்கும் விந்தைக்கவிகளையும் யாவரும் வியக்கும்படி பாடும் வல்லமையும் உடையராயினர். அக்கவிகள் சொல்லடுக்கும் பொருள்வனப்பும் வாய்ந்து நல்லமைப்பாமென நாவலர்கள் புகழ்ந்துகூறும் பெருமைவாய்ந்தவை. இங்ஙனம் பாடும் புலமை மாம்பழப்புலவர்க்கு எய்தியது, பண்டிதர்களின் கூட்டுறவாலும், இலக்கண இலக்கியங்களையும், காவிய அமுதங்களையும் ஆசிரியர்கள் மிகுதியாகப்புகட்ட அவற்றைத் தெவிட்டவுண்டு தேக்கெறிந்ததனாலுமேயாம்.

மேலும், இளங்கவியாகிய மாம்பழப்புலவர்பால் வேகமாகக் கவிபாடுந்திறமையுடன், மற்றும் பல அரிய ஆற்றல்களும் அமைந்திருந்தன. அவை, எத்துணைச்சிறந்தபுலவரும் தாம் அருமையாகப்பாடிய கவிகளையும் பிரபந்தங்களையும் ஒருமுறை இவர்முன் மொழிவார்களாயின், அவைகளை இவர் அப்படியே காந்தம் இரும்பைத் தன்னுள் ஈர்த்துக்கொள்ளுதல்போல் ஈர்த்துத் தமதாக்கிக் கொள்ளுந்திறமையும், பிறர்வாய்ப்பேச்சின் ஒலிக்குறிப்பையும், தம் எதிரே வருவோர் காலடியோசையையும் விரைவிலறிந்து அவர்கள் இன்னின்னர் என்று தெளிவாகக்கூறும் நுண்ணுணர்வும், யாவரும் வியக்குமாறு பொருட்பொலிவும் சொல்லழகும் பொருந்த வாசாமகோசரமாய்ச் சபைமெச்சப் பேசும் பிரசங்க வன்மையும் முதலியனவாம்.

இத்துணை இளவயதில் இன்னோசைமிகும் அருமைக்கவிகளை எத்துறையிலும் தட்டின்றி அநாயாசமாகப்பாடுதல் என்பது அதிசயமானசெயல். அவ்வருஞ்செயல் அறிவுத்தெய்வத்தின் ஆருளாலேயே ஒருவர்க்கு அமைகின்றது. அங்ஙனம் அமையப் பெற்றவரே மாம்பழக்கவிராயர்.

10. பாடும்பண்பறிந்ததும்—பாப்பம்பட்டிமிட்டாதார் பரிசளிக்கப்பெற்றதும்.

பண்புடைய பாட்டுக்களை முறையறிந்து, இன்னிசைவிரவச் சுவைபெருக யாப்பிலக்கணவிதிவழுவாது, சந்தர்ப்பம் நாட்டின் பாஷைநிலை மக்கள்விருப்பம் முதலியன தழுவிப் புதுமுறையில் புத்துணர்வு எழப் பாடுவதுதான் பயன்விளைப்பதாகும். அவ்வகையைத் தழுவிப் பாடிய பாட்டுக்களே மாம்பழக்கவியின் பாட்டுக்கள். அப்பாடல்கள் பலவிடத்தும் பரவக்கேட்ட மக்கள் மனமகிழ்ந்து கன்னிக்கவியின் புதிய வரவுக்கு ஆசிகூறினர். பாடற்றொகை நாளடைவில் மிகுதிப்படப்படப் பாவலர்பெயரும் மேலும் மேலும் வியாபிப்பதாயிற்று.

மாம்பழக்கவியின்புகழ் முதன்முதல் பழநிப்பதியில்தான் விளங்கியது. அப்பொழுது அப்பதியில், பழநியாண்டவன் ஆலய நிர்வாகஸ்தர்களில் தலைவராயிருந்து சீரியமுறையில் தாமேற்றுக்கொண்ட அரும்பணியைச் செய்துவந்தவரும் தெய்வபக்தி

மிக்கவரும் தமிழறிவுபடைத்தவரும் பரோபகாரசீலரும் செல்வ ரும் பழநிக்கு மிகவும் அணித்தான பாப்பம்பட்டியைப் பிறப்பிட மாகக்கொண்டவரும் எக்காரியங்களையும் திறமைபெற நடாத்தும் சமர்த்தரெனஎல்லாராலும்கொண்டாடப்பெற்றவருமிட்டாதாரு மான ஸ்ரீமான். வேங்கடசாமிநாயக்கர் பெயர்சிறந்துவிளங்கினர். அவர் பெருமையும் புகழும் மதுரை கோயம்புத்தூர் திண்டுக்கல் முதலிய நகரங்களிலும் வியாபித்திருந்தன. அந்நல்லார், இளம்புலவ ரான மாம்பழப்புலவரின் இனியகவிகளைக்கேட்டு அதிசயத்து, அக மிகமகிழ்ந்து அதுமுதல் அவர்பால் அன்புகொண்டு, அவரைத் தமிழகத்தில் பாடும் புலவருள் சிறந்தவராகச் செய்யவெண்ணி, அவர் புலமையையும் பாட்டின் இனிமையையும் பெயரையும் தாமே எங்கும் பரப்புவதில் பெரிதும் முயன்றனர். அம்முயற்சி யால் அந்நாடுமுழுதும் மாம்பழக்கவியின்பெயர் வியாபித்தது. தம் பொருட்டுப் பிரபு எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டி, பால கவியாகிய மாம்பழப்புலவர், அவர்மீது தனிநிலைக்கவிளும், தொடர் நிலைக்கவிகளும் ஆகப் பல புகழ்ச்சிப்பாடல்களைப் பாடினர். அக் கவிகள் இன்பம்பயந்து இதயத்தைக் களிப்பிப்பனவாகவும் இருந் தன. அவற்றின் சுவையைச் சுவைத்து அறிந்ததோடு, அறி ஞர்கள் பாராட்டிக்கூறுவதையும் கேட்டு ஆகம்பூரித்த மிட்டா தார் வேங்கடசாமிநாயக்கரவர்கள், அம்மகிழ்ச்சிக்கு அடையாள மாக மாம்பழக்கவிக்குப் பொன்முடிப்பு, பீதாம்பரம், ஜோடிசால்வை, கெண்டையுருமால், சரிகைவேஷ்டி, காளைகள்பூட்டிய பெட்டிவண்டி முதலியவற்றை வரிசையாக நல்கினர். இவ்வரிசையால் மாம்பழக் கவியின்பெயர் முன்னினும் அதிகமாக ஊரெங்கும் பரவியது. அதனுடன் அவர் பாட்டின் பண்பும் பாடும் புதுமையும் புகழும் பழநிக்கு அப்பாலும் எட்டின.

இங்ஙனம் தம்மை அபிமானித்துப் பரிசுகள்வழங்கிய தமிழ்ச் செல்வரான நாயக்கரவர்கள்மீது மாம்பழக்கவிராயர், வேட்டைப் புகழ்ச்சி புலிப்பவனி குறவஞ்சி கீர்த்தனை சீட்டுக்கவி முதலியவை களைப் பாடி அவர் பேரன்புக் குரியராயினர். இவ்வாறு தம்மை அபி மானித்த நாயக்கரவர்கள் பெரியதொரு வழக்கில் வெற்றிபெற்ற தை மாம்பழக்கவி பாராட்டிப்பாடிய சீட்டுக்கவி, யாவரும் சுவைத்து இன்புறத்தக்க அழகுடையது. அது அடியில் வருமாறு:—

ஆசிரியவிருத்தம்.

திருவுலவு புருடசெய சிங்கமென வங்கநின்
திவ்யசா மர்த்யமான
திறமைகளை இவ்வள வெனக்குறிப் பிட்டொருவர்
செப்புதற் கெளிதாகுமோ?
சிற்றெறும் போர்கடலை வற்றக் குடித்துச்
செயிக்கத் துணிந்துசெல்லுஞ்
செய்கைபோற் கொழுமத் தினிற்சில விரோதிகள்
சேர்க்கையறி யாமல்மீறிக்
கருதுபல மனிதர்துர்ப் போதனையில் வீழ்ந்துசர்க்
கார்தனிற் பொய்ப்பிராது
காட்டிமேற் சென்னபட் டணலாய ரைக்கொண்டு
காரிய முடிக்கவெண்ணிக்
கைப்பொருளை வீணிலே செலவிட்டு முயல்கின்ற
காலத்தில் நீநகைத்துக்
கனவேக மாகரயில் வண்டியிற் சென்றுமங்
களசென்ன பட்டணத்தில்
மருவுமதி காரவுத் யோகர்க ளநேகர்தாம்
வந்துமரி யாதைசெய்ய
மகிழ்கூர்ந்து மேன்துரை தனைக்கண்டு வகைசொன்ன
மாத்திரத் தவனெழுந்து
வளர்கோய முத்தூர் தனில்ஜட்ஜி துரைமுன்பு
வார்த்தையொவ் வொன்றினாலே
வாதிகள் பிராதையெல் லாந்தள்ளி யேபழநி
மானேஜர் பாற்கண்யமுங்
கருமகுண சவுர்ய ப்ரதாபமும் புகழ்சகல
சௌபாக்ய மும்பெற்றுளோன்
சாமிநீ காலால் முடிந்ததைக் கையாற்
சமர்த்தனு மவிழ்க்கவசமோ?
சகுதுரைக ளெல்லாஞ் சபாசெனும் படிவென்ற
தாஷ்டீக கோலாகலா!
தங்கவணி மேவுபுய வெங்கட சுவாமிநய
சம்ப்ரம சபாவுசிதனே.

இச்சீட்டுக்கவியில் தமிழ்ச்சொற்றொடர்களேயன்றி, 'புருட ஜெய,—திவ்யசாமர்த்யம்—மங்களம்—சவுர்யம்—பிரதாபம்—சௌ பாக்யம்—தாஷ்டீகன்—கோலாகலன்—சுவாமி, சம்ப்ரமம்— சபா— உசிதன்' என்ற வடசொற்களும் சர்க்கார்—பிராது—லாயர்—ரயில் —ஜட்ஜி—துரை—மானேஜர் முதலிய பிறசொற்களும் விரவி இடம் பெற்றிருக்கின்றன. இம்முறையிற் பாடும்புலவர்களுள் மாம்பழக் கவிராயர் ஒருவரே 18–19-ஆம் நூற்றாண்டில் பிரசித்தராகவிளங்கி யிருந்தனர்.

தம் கவி பரிசுபெறுதற்குத் தகுதியுடையதென நாயக்கரவர்க ளால் நன்கறிந்தபிறகே கவிராயர், பழநிப்பதியிலும் அதனைச் சார்ந்த சிற்றூர் பேரூர்களிலும் சீமான்களாக விளங்கியவர்க ளிடத்துச் சென்று அவர்கள்மீது கவிகள் பாடியும், சிறுபிரபந்தங் கள் இயற்றியும் வெகுமதிகள் பெற்றுத் தம்மைப் பிரசித்தராக்கிக் கொண்டனர். இதனால் இவருக்குப் பொருளும் புகழும் பெருமை யும் உண்டாயின.

மாப்பழப்புலவர் ஆண்டில் மிக இளையராயிருந்தாலும் தெய்வ பக்தியில் முதியராயிருந்தனர். தாம் யார்மீது கவிபாடத்தொடங்கி னும், தொடங்குதற்குமுன்னர்த் தமக்குப் பாடும்புலமையருளியவ ரான தண்டபாணியின் திருப்பெயரை உச்சரித்து வணங்கியே பாடத்தொடங்குவர். இந்நற்பழக்கம் கவிராயருக்குப் பல நன்மை களைத் தந்தது. தெய்வசிந்தனையும் கடவுள்வழிபாடும் மனித னுக்கு வாழ்வளிக்கும் நற்சாதனங்களன்றோ?

கருமவயத்தால் மாம்பழக்கவிராயருக்குக் கண் கெட்டதாயி னும், அறிவொளி மிகுந்துவந்தமையால் ஒருமுறைகேட்ட கவி முதலியவற்றைக் கேட்டவாறே சிறிதும் பிழையின்றிக் கூறுமாற்ற லும் அவர் உடையராயினரென்பது முன்பே கூறப்பட்டது. முருகன் திருவருள்பெற்ற சிலர்க்கு எதுவும் தானாகவே வந் தமைந்து சிறப்பினை நல்குமன்றோ?

[தொடரும்.]

சி. கு. நாராயணசாமிமுதலியார்.

சந்திரன்:—யாரையனுப்பினலும் சரி. அது உங்கள் நோக்கப்படியென்று நேற்றே தெரிவித்துக்கொண்டேனன்றோ?

அலக்ஷயேந்திரன்:—எனக்கு உம்மோடு மற்போர்புரியவேண்டுமென்று ஊற்றமுண்டாகிறது. ஆதலின் நாமிருவருமே விளையாடுவோம்.

புருஷோத்தமன்:—[அலக்ஷயேந்திரனைக்கிட்டி] அரசே! சந்திரன் சிறுபிள்ளை. மேலும் உங்கள் சக்கரவர்த்திப்பதவிக்கும் அவன் பதவிக்கும் வெகுதூரம். உங்கள் வல்லமையை இந்தச் சிறுபையனிடம் காட்டுதல் தகுமா?

அலக்ஷயேந்திரன்:—இருந்தாலும் இந்தச் சிறுவன்திறத்தைப் பார்க்கவேண்டும்.

புருஷோத்தமன்:—சந்திரன் உறுதியைக்கண்டு யாரும் சிறிது அஞ்சவேண்டியதுதான். நீங்கள் ஜயம்பெறுவீர்களென்று நாங்களெல்லாம் பூரணமாய்நம்பினலும், காரியமுடிவில் எப்படியாகுமோ? உங்களைத் தவிர வேறு யாராயிருந்தாலும் சந்திரன் கையால் தோல்வியடைவதிற் குற்றமில்லை.

அலக்ஷயேந்திரன்:—யானே தோல்வியடைவதாகவைத்துக் கொள்வோமே? அதிலென்ன குற்றம்?

புருஷோத்தமன்:—தங்கள் சித்தத்தில் அங்ஙனம்பட்டால் இனி யான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை.

அலக்ஷயேந்திரன்:—சந்திரரே! உஷார். மற்போர்தொடங்குவோமா?

[இருவரும் மல்யுத்தஞ்செய்ய, யமுனையும் விகலனும் தம்முள் உரையாடுதல்.]

விகலன்:—அம்மா! அங்கே நடக்கும் போர் மிகவும் அநியாயமானது.

யமுனை:—ஏன்?

விகலன்:—தன்னினும் பத்துவயது இளையவனோடு எந்தச் சுத்தவீரனவது மல்யுத்தம் செய்வான? அந்த அயல்நாட்டு வீரன் ராக்ஷஸசொரூபியாகவும், முரட்டுத்தனமாகவும், சாஸ்திர விரோதமாகவும் கண்டவிடங்களிலெல்லாம் தாக்கிப் பொருகிறன்.

இச்சிறுபிள்ளையோ அப்படியின்றிச் சாஸ்திரப்படி அடிகள், பிடிகள், குத்துக்கள், உறுப்புக்கள் முதலியவற்றைத் தெரிந்து நிதானமாகப் பாய்கிறான். தன்னைக் காத்தலையே முதன்மையாகக்கொண்டு பின் எதிராளியை வீழ்த்துவதற்கு முயல்கிறான்.

யமுனை:—அப்படிச்செய்வதுதான் சாஸ்திரீயமோ?

விகலன்:—ஆம். ஏனெனில் எதிராளியை வெல்லாவிட்டாலும் தான் தோல்வியடையாமலிருக்கவேண்டியது முக்கியமன்றோ?

யமுனை:—ஆகா! அந்தப்பெரியவன் கெலித்துவிடுவான். சிறியவனுடைய இருகால்களையும் கட்டிப்பிடித்துவிட்டான்; இனி இழுத்துப் புரட்டவேண்டியதுதான்.

விகலன்:—சிறியவன் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா! நாகப்பாம்பு வாலைப்பிடித்துத் தூக்கினால் இரட்டையாய் மடித்துக்கொண்டு உயர்வதுபோல் வளைந்துயர்ந்து பெரியவன் தோளிற் குத்திக் கால்களை விடுவித்துக்கொண்டான்.

யமுனை:—உண்மைதான். இவன் குத்துக்காற்றமாட்டாமல் கைவலியற்ற பெரியவன் தரையிற் குப்புறப்படுத்துக்கொண்டான். சிறியவன் எப்படி அவனைக் கிளப்புவான்? பார்ப்போம்.

விகலன்:—கிளப்பமுடியாதென்றுதான் எனக்கும் தோன்றுகிறது.

யமுனை:—அவசரப்படாதே. பார்ப்போம்.

விகலன்:—இச்சிறுவன் சாமர்த்தியம் வியக்கத்தக்கதே! இவன் மனவலியும் மேம்பட்டது. இவன் சாமர்த்தியம் பலிக்காதுபோலிருக்கிறது.

யமுனை:—பார்த்தாயா! புரட்டிவிடுவான். இன்னும் சற்றுப் பொறு.

விகலன்:—ஆகா! புரட்டிவிட்டான். [கரகோஷம்]

அலக்ஷயேந்திரன்:—[உடனே எழுந்து உடைவாளையுருவிக்கொண்டு சந்திரனையணுகி] மல்லில் வென்ற மைந்தரே! வாளால் விளையாடுவோம் வருக.

[புருஷோத்தமன் முதலியோர் கொட்டடியுள் வரல்]

புருஷோத்தமன்:—அரசே! இனி வேண்டாம். இத் துடன் நிறுத்திவிடுங்கள். இச்சிறுவன் செயல்களால் நீங்கள் சந்தோஷமடைந்து அவனை ஆசீர்வதிக்கவேண்டும். [சந்திரன் தலையைத் தடவி] பிள்ளாய்! சுத்தவீரனென்னும் பெயர் உனக்குத் தகும்.

அலக்ஷயேந்திரன்:–சந்திரா! உலகெலாம் வென்ற என்னை ஒரு நொடியில் வென்றனை. அதனால் மகிழ்ந்தேன். என்னுலியன்றதை நீ கேட்டாலும் தருவேன்.

சந்திரன்:—[தலைவணங்கி] "அரசே! தாங்கள் எங்கள் தேசத்தின்மேற் படையெடுத்துச் செல்லாமல் திரும்பிப்போகவேண்டும்."

அலக்ஷயேந்திரன்:–[சேனுபதிகளை நோக்கி] இச்சந்திரர் சொல்லுகிறபடி நடக்கலாமா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

பிரதமசேனுபதி:—இறைவ! என்சிற்றறிவுக் கெட்டினமட்டில் அப்படியே செய்யலாம். நம் படைஞரும் அவரவர் வீடுவாசல்களை விட்டுவந்து வெகுநாளானபடியால் ஊருக்குத் திரும்பிச்செல்லுவதில் மிகுந்த ஆவலுடையவராயிருக்கிருர்கள். மகதனேடு யுத்தம் செய்தாலும் சாதாரணத்தில் முடியாது.

2-ஆம்சேனுபதி:—அரசே! அவர்சொல்வது சரிதான். நாங்களெல்லாரும் ஊரையும் உறவினரையும் விட்டுவந்து வெகுகாலமாயிற்று. உலகில் ஒரு பாதிக்குமேல் வென்ற உங்களுக்கு மற்றதை வெல்வது பெரிதல்ல. இச்சமயம் நம் தேசத்துக்குத் திரும்பிப் போய்விட்டு மறுபடியும் புதிய படைகளைத் திரட்டிக்கொண்டு வருவதுதான் உசிதமென்று தோன்றுகிறது. பின்பு, அவ்விடத்துச்சித்தம்போல் நடக்கக்காத்திருக்கிறோம்.

அலக்ஷயேந்திரன்:—நம்படைகளின் அபிப்பிராயமும் இவ்விஷயத்தில் அறியவேண்டும். [படையினர் கரகோஷம்.] இவர்கள் கரகோஷத்தால் நாம் திரும்பிவிடுவதையே அபேக்ஷிக்கிருர்கள். [சந்திரனைநோக்கி] சந்திரரே! நீர் கேட்டவரத்தைத் தந்தேன்.

சந்திரன்:—அரசே! இந்தவரத்தை எந்தநாளும் மறவேன். உங்கள் பெருந்தன்மை வியக்கத்தக்கது.

அலக்ஷயேந்திரன்:—[நந்தன் தூதரைநோக்கி] தூதர்களே! உங்க ளரசன் இன்றுதான் நற்றவப்பயன் பெற்றான். நாம் ஊருக்குத் திரும்பிப்போய்வருவோமென்று சொல்லுங்கள்.

தூதர்தலைவன்:—அப்படியே.

[கூட்டம் முழுதும் கலைந்து எல்லோரும் போய்விட,
புருஷோத்தமன் சந்திரன் யமுனை விகலன்: இவர்கள்மட்டும் இருத்தல்.]

யமுனை:-[சந்திரனைக்கிட்டிக்கட்டி முத்தமிட்டுக்கொண்டு] பிள்ளாய்! பெரியோர்தவப்பேற்றால் உன்னைத் திரும்பக் கண்டுகொண்டேன்.

சந்திரன்:—[தரையில்விழுந்து தாயைவணங்கிக் கண்களில்நீர்ததும்ப] தாயே! உம்மிடம் நான் மிகவும் அபராதியானேன். சொல்லாதுவந் ததுமன்றி நீங்கள் என்னைத் தேடி இடர்ப்படுதற்கும் காரணமாயி னேன். [புருஷோத்தமனைநோக்கி] எம்மரசே! இவர் என் அன்னை!

புருஷோத்தமன்:—தெரிந்தது; நீர் இவ்வளவு அறிவுடையவரா யிருந்தும் தாயாரிடம் சொல்லாமல் எங்ஙனம் ஊரைவிட்டுவந்தீர்?

விகலன்:—தம்பி விகலனையும் கைவிட்டுவந்தார்.

சந்திரன்:—[தனக்குள், ஓகோ! சுலோசனையே இவ்வாறு ஆண்வேடம் பூண்டு மாறுபெயர் தரித்திருக்கிறாள் என்று நினைந்து விகலனையடுத்து] அப்பா! விகல! நான் உன்னிடத்தும் அண்ணனைப்போல் நடந்து கொள்ளவில்லை. [என்று கையால் வாரியெடுத்து முத்தமிட்டு உச்சிமுகந்து, பின் இருவரையும் நோக்கி,] இருந்தாலும் ஈசன்செயலால் நீங்கள் சுகமாயிருந்தது என்பாக்கியந்தான்.

புருஷோத்தமன்:-சந்திரரே! இன்று நம் படமாடத்தில் நாமெல் லாம் உண்போம், வருக. பாரதமாதாவின் உண்மையான புத்திர சிகாமணிகளில் நீர் ஒருவர். மகதநாட்டில் வீசக்கிளம்பிய பெரும் புயலை உம்முடைய தோள்வலியால் தடுத்தீர். நீர் சத்துருஜித்தும் மெச்சக்கூடிய வீரரே!

[எல்லோரும் செல்லுதல்.]

அங்கம் - III.

களம் - 4.

இடம்:—தர்மசிலரரண்மனை மேன்மாடத்து நடுக்கூடம்.

பாத்திரங்கள்:—தர்மசிலர், சாணக்யர், பிரபுக்கள், சேவகர்கள்.

தர்மசீலர்:—ஆரடா! சேவகன்.

சேவகன்:—எஜமான்!

தர்மசீலர்:—வாயில்காப்போனிடம் ஒருவரையும் உள்ளே விடக் கூடாதென்று சொல். எச்சரிக்கையாயிருக்கச்சொல். தடுக்கக் கூடாதவர் யாரேனும் வந்தால் ஓடிவந்து முதலில் தெரியப் படுத்தச்சொல்.

சேவகன்:—அப்படியே. எஜமான்! (செல்லல்)

முதற்பிரபு:—தர்மசிலரே! நராதிபதிகளில் நந்தரைப்போன்ற வர் யாரேனும் உண்டா?

இரண்டாம்பிரபு:—சந்திரனுக்கும் அதிஜயனுக்கும் அடிதடி நேர்ந்தால், பாவம், சும்மா இருந்த சாகரனென்னும் சிறுவன் என் செய்வான்? அவனைச் சிறைச்சாலையிலடைத்துவைத்து அநேக கஷ்டங்களுக்கு உள்ளாக்கக்கூடாதென்று உங்களைப்போன்ற பெரி யோர்கள் எடுத்துச்சொல்லக்கூடாதா?

தர்மசீலர்:—தர்மத்தைச்சொன்னால் கேட்கக்கூடிய அரசர்கள் காலம் முன்னமேயே போய்விட்டது.

முதற்பிரபு:—அந்தக் காலங்களெல்லாம் போய் இந்தக்காலம் ஆச்சரியமாயிருக்கிறது. என் இளவயதில் என்தகப்பனார்சொல்லக் கேட்டும் நான் நேரில் கண்டும் இருக்கிறேன். அரசனென்றால் மநு நெறிபிறழலாமா? தன்னுயிரைக் கொடுத்தும் மன்னுயிரைக் காப்பார்களே! இப்பொழுதெல்லாம் வலிமையுள்ளவன் வலிமை யற்றவர்களை வருத்துதலும், அதனால் பெரும் கீர்த்தியும் அடை வதுமாயல்லவோ இருக்கிறது. அரசன்செய்வதைத்தான் இந்தக் கிரமத்தில் குடிகளும் அநுசரிக்கிறார்கள். நேபாளஞ்செகுத்த நிர்மலகுப்தருக்கு இவர் பாட்டனார்காலத்தில் விட்டிருந்த மான்யம் முழுவதையும் பிடுங்கிக்கொண்டு அவரை ராஜ்பத்திலிருக்கக்கூடா தென்று விரட்டிவிட்டாராம்.

தர்மசீலர்:—ஆ! அப்படியா! எதற்காக?

இரண்டாம்பிரபு:—சாகரனென்பவனை அநியாயமாய்ச் சிறையில் அடைத்துவைக்கக்கூடாதென்று அவர் சபையில் நேற்றுச் சொன்னாராம். இன்றுகாலை ராஜாஜ்ஞை பறக்கிறது.

முதற்பிரபு:—அவருடைய சகல ஜங்கமசொத்துக்களுங்கூட அட்டவணையெழுதப்பெற்று அரண்மனைக்குப் போய்ச்சேர்ந்து விட்டனவாமே?

தர்மசீலர்:—ஏனையா! நாமும் நாளைக்கு ஒரு நியாயத்தைச் சொன்னால் இப்படித்தானே.

முதற்பிரபு:—ஆனால் இதைச்செய்தது நந்தன் நலத்துக்கன்று. நிர்மலகுப்தர்பெயர்கேட்டால் யாரும் நடுங்குவார்கள். அவரிடத்துப் போர்த்தொழில்பயிலாத சிற்றரசர் இந்த மகதநாட்டில் இல்லை. படைத்தலைவரனைவரும் அவரைத் தெய்வமாகவன்றோ பாவித்திருக்கிறார்கள். அவரிடத்தில் அரசனுக்கு இவ்விதம் புத்தி வந்தது அவன் நாசத்துக்குத்தான்.

தர்மசீலர்:—இந்தச் சந்திரன்தான் எங்கேபோயிருப்பான்? இவ்விடத்தில் அவனுக்கு உறவாயிருந்தார் யாருமில்லையோ?

சேவகன்:—வாயிலில் இரண்டு சேவகர்கள் எஜமானவர்கள் சமயத்தை எதிர்பார்த்துநிற்கிறார்கள்.

தர்மசீலர்:—அவர்கள் யாரென்று கேட்டனையா?

முதற்பிரபு:—நாம் பலவாறு பிரிந்துவிடுவது நலம். நாம் இங்குப் பேசிக்கொண்டிருக்கும்விஷயம் அரசன்காதுக்கு எட்டியிருக்கக் கூடும். அளவிறந்த ஒற்றர்களால் நாம் உண்ணும் உணவுமுதல் எண்ணும் எண்ணம்வரை யாவும் அரசனுக்கு அப்போதைக்கப் போது தெரிந்துகொண்டிருக்கின்றன.

சேவகன்:—அவர்கள் பாஞ்சாலதேசமாம். அவர்களுடைய தலைவரான சந்திரரென்பவர் அனுப்ப வந்தவர்களாம்.

தர்மசீலர்:—நண்பரே! இது நீர்சொல்லியவண்ணமின்றி நல்லதுபோலிருக்கிறது. [சேவகனைநோக்கி] அவர்களை இங்கே அழைத்துவா.

முதற்பிரபு:—சந்திரரென்பது நம் சந்திரனுயிருக்குமோ?

[சேவகன் இரண்டு வீரருடன்வர இருவீரரும் கைகூப்பித் தொழுதல்]

உத்தரன்:—[தர்மசீலரைநோக்கி] தர்மசிலரென்னும் எஜமான் தாங்கள்தானே?

தர்மசீலர்—ஆம். நீங்கள் யார்?

உத்தரன்:—பாஞ்சாலர்படைத்தலைவர் சந்திரருடைய சேவகர்கள். அவரன்பர் சாகாருக்கு இவ்வோலைகொணர்ந்தோம். [ஓலைகளைக் கொடுத்து] அவர் சிறைப்பட்டிருப்பதால் பெரியோராகிய தங்களிடத்திற் கொடுத்துவிடலாமென்று பக்கத்துவீட்டிற் சொன்னார்கள். இக்கடிதத்தில் உள்ள விஷயத்தை அவருக்குத் தெரிவித்து எங்களுக்குப் பதில்வாங்கித்தரும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மசீலர்:—இரண்டு ஓலைகள் இருக்கின்றனவே.

சித்திரன்:—ஒன்று எங்கள் தலைவர்கொடுத்தது. மற்றொன்று நாங்கள் வரும்வழியில் எங்களைச் சந்தித்த சாகாருடைய தம்பியார் அவர் தமயனருக்குக்கொடுத்தார்.

தர்மசீலர்:—சாகானுக்கு ஒரு தம்பியுண்டோ?

முதற்பிரபு:—எதோ? தம்பியோ? தங்கையோ? இளையது ஒன்று உண்டென்றுதான் கேள்வி.

தர்மசீலர்:—இவைகளை நாம்பார்ப்பது தகுதியன்று. ஆயினும், [சேவகர்களைநோக்கி] உங்கள் தலைவர் பாஞ்சாலனிடத்தில் என்ன வேலையிலிருக்கிறார்?

சித்திரன்:—அவர்தான் எங்கள்நாட்டுச் சேனைத்தலைமை வகித்திருக்கிறார். குறுநாடுவென்ற கோளரியென்றும், அலக்ஷியற்செற்ற விலக்ஷணரென்றும், வேற்றரசறுத்த கூற்றுவரென்றும் யாவரும் புகழும்படி பலவித விருதுகளுடன் எங்கள் சைநியத்தின் நாயகமணியாய் விளங்குகிறார். அவரால் நடத்தப்பட்டு நாங்கள் சென்ற களமெல்லாம் வென்றியொடு மீண்டுளேம். பொருதிடுகளமெலாம் விருதுகொண்டெழுவோம்.

முதற்பிரபு:—[தர்மசீலரிடத்தில் தனித்து] சரி. இவர்கள் நல்ல வேளையில் இங்கு வந்துசேர்ந்தார்கள். இவர்களை இனி நாம் கேள்வி கேட்டுக்கொண்டிருத்தல்கூடாது. இந்தச்சமயத்தில் உண்மையை இவர்களிடத்திற்சொல்லிச் சங்கதிகளைச் சந்திரனுக்குத் தெரிவித்து விட்டால் பிறகு தெய்வச்செயல்போல் ஆகிறது.

தர்மசீலர்:—அப்படியே; இவர்களுக்குச் சொல்லலாம்.

முதற்பிரபு:—சேவகர்களே! உங்கள்வரவால் நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம். உங்கள் தலைவராகிய சந்திரர் எங்கள் சக்கரவர்த்திக்கு மிக விரோதி. அதனால்தான் சாகரனும் சிறையிலிருக்கிறான். அவருடைய மேன்மையையும் கீர்த்தியையும் நீங்கள் இந்நகரத்திற் பிரஸ்தாபித்தல் தகுதியன்று. நீங்கள் உடுப்புக்களை மாற்றிக் கொண்டு எங்களைப்போன்ற நடையுடைகளுடன் இன்றோரிரவுகழியு மட்டும் சும்மா இருந்தால் இன்றிரவில் இக்கடிதங்களைச் சாகரருக் குக் காட்டி நாளைக்காலை உங்களுக்குப் பதில்வாங்கித்தருவோம்.

சித்திரன்:—அப்படியே ஆகட்டும்.

தர்மசீலர்:—[சேவகனையழைத்துச்] சேவகா! இவர்களைக் கீழே அழைத்துப்போய் நம் சேவகர்களைப்போல் உடைமுதலானவை யுதவி உணவளித்துவைத்திரு.

[சேவகன் அழைத்துக்கொண்டுபோதல்]

முதற்பிரபு:—தர்மசீலரே! காலத்தைப் பார்த்தீரா? நம் அரச ருக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டது.

தர்மசீலர்:—இல்லாவிட்டால் இவர்கள் வருவானேன்? இருக் கட்டும். நீர் எவ்விதம் இவைகளைச் சாகரருக்கு அனுப்புவீர்?

முதற்பிரபு:—அதை நான் பார்த்துக்கொள்கிறேன். இனிமேலே ஆகவேண்டியதைப் பார்க்கவேண்டியதுதான். போய்வருகிறேன்.

தர்மசீலர்:—நீங்கள் உங்களைப்பற்றினமட்டில் ஜாக்கிரதையா யிருங்கள்.

[எல்லாரும் விடைபெற்றுப் போதல்.]

2276 ஊடின வெகினப் பேடை யுயர்சினை யேறப் பாங்கர்த்
தேடின சேவ னீருட் செறியதன் படிவ நோக்கி
வாடினை வருதி யென்னா வருதலின் றாக மையல்
கூடிய நிலைமை நோக்கிக் குறுநகை விளைப்பர் மன்னே. ()

2277 உயர்சினைப் படர்மென் கோவை யுறுகனி புனலுட் டோன்ற
மயர்வுறு கிள்ளைப் பிள்ளை வாய்மடுத் தூறு கொள்ளா
தயர்வுறு நிலைய வாகி யலம்வரு நோக்கந் தன்னைக்
கயல்புரை கண்ணி னாரிற் களிதக நோக்கி நின்றார். (௫௯)

2278 அரம்பிடித் தயில்செய்வேல்போன் றமர்புரிமதருண்கண்ணார்
கரம்பிடித் தனராய் மைந்தர் கமழ்புனல் குடைந்த பின்னர்ப்
புரம்பிடித் திருந்தகொற்றம் புறமிடப்பொருப்புவிற்கொண்
டுரம்பிடித் தவனொடொன்றுமையெனக்கரையிற்சார்ந்தார்.

2279 கழித்தன ரீர வாடை கழித்தபின் கனகந் தோய்த்துச்
சுழித்தெழு தியபொன் னாடை யுடுத்தனர் சுருண்மென் கூந்தல்
அழித்தன ருதறி மீள முடித்தபின் னலர்கை யேந்திக்
குழித்தறி புடைத்த தானைக் குரம்பையுட் குடிபுக் காரே.

வேறு.

2280 கூர்த்த கிம்புரிக் கோடுடை மதமலை கொதித்தேயுள்
வேர்த்த தாலெழும் விலாழியை யிறைத்தடிக் கடிவீசப்
பார்த்த சேடரு நீருண வவற்றொடும் பாய்மாவை
நீர்த்த டந்தொறு நிறுத்தின ராட்டினர் நிறைநீரே. (௬௨)

2281 வளைத்த தாளொடுங் கதிபயி விவுளியு மதமாவு
மிளைத்த தால்வரும் வருத்தம தகன்றபி னினிதூட்டித்
தளைத்த காலையிற் றறியொடும் பொருதவை தமிநிற்பக்
கிளைத்த வாயிரக் கதிரவன் குடதிசைக் கிரிபுக்கான். (௬௩)

2282 எறித்த வான்கதிர் கடல்புக விருள்படர்ந் திடர்ஞாலங்
குறிக்கொ ளெல்லையி லிந்துவந் தின்பம துறுகொள்கை

நெறிக்கொள் செல்வம திகழ்ந்தவ னிரப்பற நிறைசெல்வ
மறித்து மெய்தலும் விருத்தனு நிலைமகிழ் வகைமானும். ()

வேறு.

2283 *திங்கள்வெண் கதிரும் பானுவின் கதிருஞ்
சிறிதும்வை கலுநுழைந் தறியாப்
பொங்கர்மல் கியபூஞ் சோலைகள் [1]ளிடைக்கண்
புதையிருள் [2]புறந்தர மடவா
ரெங்குமேந் தியசெஞ் சுடர்களா லுரக
னேந்தெழின் மவுலியா யிரத்துந்
தங்குபன் மணிகள் பரப்பிவைத் தொளிர்பா
[3]தலமுமீ தெனப்பொலி தருமே. (சுரு)

2284 முற்றும்வெண் டிரைநீ ரகத்தவாய்க் கருணை
முகுந்தனு லமைத்தபே ரண்டத்
தொற்றைமால் வரைசே ரோரோரண் டத்து
ளொருகதி ருதித்தவும் பொருவும்
சுற்றுமா தறிகள் புடைத்துநள் ளிடையோர்
தூணிறீஇப் பொலிந்தது சறையுட்
கற்றைவார் குழலார் வயின்வயி னேந்துங்
காமர்செஞ் சுடர்த்தனித் தீபம். (சுசு)

2285 மாசற விளங்கு முழுமதி முகத்தார்
மருந்தினு மினியதொன் றெனலாய்ப்
போசனஞ் சமைத்த புலத்தினின் றெழுந்த
புகைபொழிற் புறத்துராய் விசும்பின்
வாசவன் பதிக்கும் பொழிற்குமப் பெயரே
வாய்மையாய்த் திருத்திய தென்று
னேசமுற் றிருந்த பொழிலகிற் புகையா
னிறைதரு வாசமென் பகர்வேன். (சுஎ)

[பி-ம்.] [1] ளிடையிற். [2] இரிதர. [3] தாலமீ தெனப்பொலி தருமால். மா.

2286 அங்கவ் வமுத மருந்திமான் மதச்சே
ருடிவா சமுங்கவுட் புடைக்கொண்
டிங்கித மலர்மெல் லமளிமேற் றழுவி
யிருவரு மொருவராய்க் கலந்த
கங்குலுங் கழியக் களிமயக் குறுமக்
கண்படை தவிர்ந்தெழு தாலுந்
திங்களும் விழுந்த தெழுந்தனன் கதிரோன்
றிரைத்திருப் பாற்கடற் குணபால். (சுஅ)

வேறு.

2287 தேரி னெய்தின ரிவுளியி னெய்தினர் சிறுகண்கூர்
காரி னெய்தினர் சிவிகையி னெய்தினர் கணத்தோடும்
பாரி னெய்திமுன் படர்ந்தவம் மடந்தைவண் பரிசாரத்
தேரி னெய்தின ரிடம்பெறு தவர்பொழி விடைநின்றார். ()

2288 குன்று போற்படர் களிற்றினம் விசும்புழு கொடித்தேர்கள்
துன்று செய்கையால் விசும்பினிற் கெமிப்பவர் தொகையோடு
மென்று நின்றதங் கென்பவா விருநிலத் திடம்பெற்றே
சென்று மீள்பவ ரெவர்குணக் கொடுகுட திசையாரே.(எ0)

2289 யானை வன்பிடர் முத்தவெண் குடைநிழ லெழின்மைந்தன்
றானைமுன்செலச் சேறலுந் தாதைமன் றடந்தேர்மேல்
வானை முட்டிய தண்பொழில் வண்பரி சாரத்தே
சேனை சூழ்தரப் பொன்மதிட் புறத்தினைச் சென்றுற்றான்.()

2290 தூத ரோடினர் நங்கையென் றிருநிலந் தொழுதேத்து
மாத ராடனைப் பயந்தவற் குணர்த்தலு மணித்தேர்மேற்
பூத ரங்களொத் தெழின்மணித் துணைப்புயம் பூரித்தா
னேதெ னக்கினி வேண்டுவ தெனக்களித் தெதிர்சென்றான்.

2291 கனக நாட்டவர் கண்ணென மனிதர்கண் களிகூர்வா
னனக னற்றமர் தன்னையங் கவனெதிர் வதுகூறின்

வனச ரோருக மயிலைமா தவன்மணம் புணர்நாளிற்
சனகன் வண்புகழ்த் தசரதன் றனையெதிர் தகைமானும். (எரு)

2292 மிடல்கொள் கூம்பினிற் பாய்புணர் கலத்தொடும் விண்ணின்றும்
படர்மு கிற்குலந் தன்னொடுந் திரையொடும் படர்ந்தெங்கு
மடர்ம ருப்புடைச் சுறவொடுந் தழங்கியே யமைவெய்துங்
கடலி ரண்டெதிர்ந் தனவுமே பொருவருங் காட்சித்தே. ()

2293 கணங்கொள் வெண்டுகிற் கொடியுயர் பொனங்கொடிக் கண்ணுற்றே
பிணங்கி யாடுத லிருவர்நன் னகரினும் பெருவாழ்வுற்
றிணங்கி வாழ்ந்தன மேயென வாணியிற் றிரைதாளை
வணங்கி யேற்றெதி ரெதிர்தழு வியதெனும் வகைமானும்.

2294 மருக னைக்களி யானையின் முந்துற வரக்கண்டே
யிருகண் ணோர்முகத் தேந்தெழின் முருகனு மிவனன்றே
லொருகையோடிருமருப்புடைப்பொருப்பின்மேலுலகுய்யப்
பெருக வாழிளங் கதிரென மனக்களி பெரிதுற்றான். (எசு)

2295 தந்தை யாசையு மாதுல னாசையுந் தாயென்பாள்
சிந்தை யாசையு மிக்குலப் புதல்விசிந் தையிலுள்ளா
யுய்ந்த வாசையும் பெறுவதற் கிவன்மர புள்ளாரா
முந்தை யோர்தவ மருகனுக் கியதென மொழிகின்றார். ()

2296 அய்ய னைத்தம ராகிமுன் படைந்தவ ரனுகுற்றே
வெய்ய செங்கதி ரின்றியே தண்கதிர் விரித்தோங்குந்
துய்ய மெய்யனை வெளிறிலாக் கேள்வியின் றுறைபோய
செய்ய னைப்புகழ்க் காரியென் றுரைப்பதெத் திறமென்றார். (எஅ)

தொடர்.

வேறு.

2297 மாதுலனைக் கண்டுமத மலையினிழிந்
தடிவணங்க வாழி யென்றப்
போதுமொழிந் தெடுத்திறுகத் தழுவிநகர்
புகுதியெனப் போந்த பின்னர்த்

தாதுகுமென் மலர்மாலைப் போர்க்கழியார்
தமையெதிர்ந்து தம்மிற் சேவித்
தேதுதவஞ் செய்தனமுன் பென்றனராய்ப்
பொன்னகர்புக் கின்புற் றாரே. (எசூ)

2298 தண்பதுமந் தளையவிழ்செந் தேனருந்தி
நெடுவாளை தளைவி டாத
விண்படர்சண் பகப்பொழிலின் மிசைபாய
நறைதிசைபாய் வீதி மேவும்
வண்பரிசா ரத்துறையுந் திருமாலை
வணங்குபுபொன் மாடஞ் சேர்ந்தா
ரொண்பரிவா ரத்தெவரும் வயின்வயினங்
கமைத்தமனை யுள்புக் காரே. (அ0)

2299 பெருந்தகைமைப் போர்க்கழியார் முதலெவர்க்குங்
கருணையினோர் பெற்றித் தாகப்
பொருந்தியதீம் பாலடிசின் முக்கனியிற்
பொற்கலத்திற் பொலிவி னீந்த
தருந்தினராய் மெல்லிலையிற் பஞ்சவா
சமுங்கவுட்கொண் டமளி மீதே
யிருந்தனராண் டிருப்பவுமே நிகழ்ந்ததிரு
மணத்தினைமே லியம்ப லுற்றேன். (அக)

இருபத்திரண்டாவது: எழுச்சிச்சருக்கம் முற்றும்.

2300 முந்தை நான்மறை முழுதுணர் சடங்கரின் முதியோரிற்
சிந்தை யாலுயர் கணிதநூல் புகரெனத் தெளிந்தோரி
னந்த மாநகர் வைகுமோ ரிரண்டெனு மந்நாளத்
தந்தை மைந்தனோ டவன்மணி மண்டபந் தனைச்சார்ந்தான்.

2301 அந்த வேலையி லகலிடத் தருந்துதி யன்னுளேத்
தந்த தாதையுந் தமரொடுஞ் சடங்கியர் தம்மோடு
முய்ந்த காதலென் றுரைபெறு கடலுவட் டெடுத்தோங்கு
மந்த மாருதந் தவழ்மணி மண்டபந் தனில்வந்தான். (உ)

2302 சென்று மண்டபத் திருகுலத் தமர்களுஞ் செறிவுற்றே
யொன்று மெல்லையின் மைந்தனைப் பயந்தவுத் தமர்கோமான்
குன்று போற்பணே முலையவண் மணங்குறிக் கொளுநாளிங்
கென்று தானென நாளேயென் றுரைத்தன ரெண்வல்லார்.

2303 எண்ணர் கூறிய வுரைதெளிந் தினியமைந் தனைமுன்போர்
வண்ண மாமணித் தேரின்வைத் தெழுகென மதமாவின்
அண்ணல் பின்செல வருந்தவந் தனதர சியன்மாறப்
பண்ணி னனெனக் குடகடற் புக்கனன் பகற்செய்வான்.(ச)

இது, காவியலிங்கம்.

2304 வனம யிற்பெடை யனையவ டாதையு மனைபுக்கான்
றினக ரன்குட கடற்புக வருமிரு டிரைந்தோடத்
தனது நன்மர பினர்வழி யினன்மணந் தழைநாளே
வினவு வோனெனத் தோன்றினன் றண்சுடர் விரிப்பானே.

வேறு.

2305 மறைமொழி முதல்வர் மன்னவர் வணிகர்
மற்றையோர் யாவரு மகிழ்ந்து
நறைமலர்க் குழலாள் கடிமணம் பயினு
ளேயென் பதுமனத் துணர்வான்

பிறைபுரை மருப்பிற் பனைக்கைமால் யானைப்
பிடரின்மே லிருந்தமூ துரைசால்
பறையறைந் திடுக வெனப்பணித் தனனப்
பாவையைப் பயந்தமூ துணர்வான். (சு)

2306 வைகறை யதனிற் றுயிலெழுந் திறைவன்
மலரடி விளக்கியங் கவன்கட்
செய்கடன் முழுது மமைத்தபின் பரம
தேசிகன் றிருவடி முடிமேற்
பெய்தவன் றனக்குங் கடன்முறை யியற்றிப்
பெரியவர் தமர்முத லெவர்க்குங்
குய்யுடை யடிசில் பாலளாய்க் காழில்
கொழுங்கனி யுடன்குழைந் தருண்மின். (எ)

2307 திருமகளுயிர்த்த திருமக ளனலாந்
திருத்தகு மடந்தைபொற் பகலாப்
பெருமண மலிநா ளைளையென் றறிந்திப்
பெரும்பதி யடையுமா துலர்க்குப்
பருமணிக் கலனு மாடையு மருண்மின்
பாடல்சான் மங்கலக் கவிகள்
வருபொழு தெதிர்கொண் டவர்குறிப் பறிந்து
வாய்மைசால் பெருநிதி யருண்மின். (அ)

2308 சிகரமே ருவினைப் பொருவுமா ளிகையிற்
சிறந்தபூம் பொனங்கொடி செறிமின்
மகரதோ ரணமும் வாழையுங் கமுகு
வாயிலின் வனப்புற நடுமின்
நிகரிலா டையினுற் பசும்பொன்னுன் மணியா
னிரைநிலைத் தேர்களு நிறைமின்
இகல்புரிந் தொருவ ரொருவரோ டிணங்கா
திருக்குமப் புன்றொழில் விடுமின். (கூ)

2309 பரிமள களபம் புறம்பர்வே திகையிற்
பரணிக டொறுநிறைத் தருண்மின்
அரிபிள வுடன்கப் புரமிலைச் சுருள்க
ளளவிலா தனகுவித் தருண்மின்
கரிகள்பண் ணமைத்துக் கவளம தருண்மின்
கவரிவெண் மயிர்பல புணர்த்துப்
புரிகதிர்ப் பசும்பொற் கலனையாற் கலினப்
புரவியும் பண்ணமைத் தருண்மின். (க0)

2310 அந்தரத் துலப்பி லுடுக்கணம் புவனத்
தடைந்ததா மெனமிளிர் தரளப்
பந்தரும் புணர்மின் பரிமளப் புழுகு
சுனைகளும் படப்பையுட் படைமின்
சந்தனத் துகளு மரிசனப் பொடியுந்
தமனியக் குடந்தொறு நிறைத்தே
வந்தவர் தமது மேனியி னிறைப்பான்
மாடவீ தியிற்சிறப் பமைமின். (கக)

2311 இன்னணம் வகுத்த வுரைபல வுணர்த்தி
யிடிக்குரற் களிற்றின்மே லிருந்து
நன்னகர் மறுகு முழுவதும் படர்ந்து
நயந்துதாக் குறுபறை யரவம்
பொன்னகர் புகலும் பேரணி வினவும்
பொற்பென விருள்புறந் தரவே
மின்னவிர் பசும்பொன் னுதயமால் வரைமேல்
விரிகதிர் பரப்பினன் வெயிலோன். (கஉ)

வேறு.

2312 சேட்டுக் கவடு படுபவளத்
திண்கா னிரைசெய் ததன்மேலு
மோட்டுக் கொழும்பொற் றடிபரப்பி
முதிர்பொற் புரிநாண் பிணித்திருளைக்

காட்டுந் தொழிற்கம் பலம்விரித்துக்
கதிர்முத் தலங்க லணிந்துகரிக்
கோட்டுக் கதிர்வெம் முலைக்குமணக்
குளிர்கா வணமிட் டனர்மன்னே. (கங)

Gவேறு.

2313 வம்படர் முலைத்திரு மடந்தைமண நாள்கண்
டும்பரும் வியப்புட னுடங்குமுகி லுண்ணின்
றிம்பரின் வெளிப்பட நிரைத்தவிழி யென்னக்
கம்பல நிரைத்தனர் கடிக்கமல மாதோ. (கச)

2314 வெண்டிரை திரண்டனைய வெண்கவரி யோடு
நுண்டுகின் மடக்கிருளை நுங்கிநிழல் காலுந்
தண்டரள மாலைமணி மாலைபுடை தாழ
அண்டரும் வியப்புறும் வனப்பினி லமைத்தார். (கரு)

2315 ஓவியமி தன்றயிரு முண்டெனல தொன்றுங்
காவிமத ருண்கண்மட வார்நிரை கவின்சேர்
தூவிமட வன்னநிரை தொக்கதொர் விளிம்பின்
மேவிய கொழும்பொனடர் மென்றிரை விசித்தார். (கசு)

2316 மாசையின் வளங்கெழு மணித்திரளின் வானோர்
பூசையி னுயர்ந்தெழு சதக்கிருது புத்தேள்
காசைநிற வொண்பொருள் கவின்பதி கடுப்பா
ஞசையி னரம்பைகமு கின்புற வமைத்தார். (கஎ)

2317 கண்டணி யிளங்கதிர் கடுத்தொளிர் பசும்பொன்
கொண்டணி குயிற்றிய குடங்கடொறு மின்னார்
மொண்டெழு வசந்தபனி நீர்முழுது முன்றின்
மண்டிணி நிலங்கமழ வீசினர்கண் மாதோ. (கஅ)

2318 ஆதிசன கன்புதல்வி யாகிய திறங்கூர்
மாதினை மணந்தநகர் மாமைசெயு மாபோற்
சாதிமணி யாலொளிர் தசும்புயர்பொன் வாழை
வீதிதொறும் வீதிதொறு மேதக வமைத்தார். (ககூ)

2319 வீசுகிர ணக்ககன வெண்ணிலவு மானுந்
தூசினொடு முத்தமணி மாலையிரு டெய்க்கு
மாசின்மணி மாலைமலர் மாலிகை புனைந்தார்
ஆசின்மட மாதருட னுடவரு மன்னே. (உ0)

2320 துந்துமி வலம்புரி துவைத்தன முழாவின்
றந்திரி முழங்கின தழங்கின தடந்தோண்
மைந்தாணி பொற்கழலின் மாதரிள மாவின்
செந்தளி ரடிக்கணி செறித்திடு சிலம்பே. (உக)

வேறு.

2321 நறுமலர்த் திருமக ணயந்த நீணகர்
பெறுமனக் களிப்பினைப் பேசற் பாலதோ
வறுபகல் கழிந்தநங் கதற்பினுடவர்
சிறுவனை மணவணி செய்ய வெண்ணினர். (உஉ)

வேறு.

2322 தளிபடு நறவ மென்பூஞ் சந்தகிற் குறடு ரிஞ்சிக்
குளிர்கொழும்பனிநீர்வாக்கிக்குழைத்தகுங்குமங்கத்தூரித்
தொளியினிற் கப்புரத்தின் றுகள்விரா யதனை யள்ளி
யொளியுற வனப்பிற் பூசி யொருங்குமெய் திமிர்ந்திட்டாரே.

2323 உரைசெறி யுறுப்போ ரேழு முறுநிலத் தணவு நோன்மை
யரசுவா வெருத்தத் தேற்றி யாடகத் தசும்பின் வந்த
திரைசெய்தென் குமரி நீர்வாய்த் திருமணி யாழி பெய்து
விரைசெய்நீர் நிகர்த்த வாக்கி விமலனை யாட்டி னாரே. (உச)

2324 ஈர நுண் டுகிலை நீக்கி யெழினிலா மருளும் வெண்பட்
டார்புற மருங்கிற் சேர்த்தி யாதிகே சவனை யேத்திக்
கூர்பிறை நடுவட் டாழ்ந்த கோவைநித் திலத்தை யேய்ப்பச்
சீர்திகழ் திருமண் செவ்வித் திருநுதற் றீட்டி மாதோ. ()

2325 கானவேய்ங் குழலிற் கானங் காட்டுநற் கடவு டன்னை
ஞானவாய் மையினிற் குன்று வருச்சனை நயந்தே யுள்ளத்

தானபே ருவகை யாள னாடையா டகங்க ளாய
தானநான் மறையோர்க் கார்த்தி தழைதர நல்கி னானே. ()
இரண்டுந் தொடர்.

வேறு.

2326 அக்கடங் கழிந்தபின் னரவ வெண்டிரை
மைக்கருங் கடலுள்வால் வளையு மிப்பியும்
உக்கதண் டாளமோ டுலப்பின் மாமணி
தொக்கபெட் டகத்தொடு மழவர் சுற்றினார். (உஎ)

2327 இருணிற வெழிலியி னழுவ மீண்டிருள்
வெருணிற முகில்வளைத் ததெனவெண்ணிலா
வருணிறப் பனிமல ரமைந்த மாலைவார்
சுருணிறத் தொங்கலிற் சூழ்ந்திட் டார்களே. (உஅ)

2328 முதிர்புயல் விளிம்புற முகிழ்த்த மின்னெனச்
சதிர்பெற வணைந்தபங் கியினைச் சார்ந்த
லெதிரிள வெயிலொளி யிரிய வேய்ந்தனர்
கதிர்மணி யழுத்திய கவின்பொற் பட்டமே. (உகூ)

2329 அனகனா னனமதிக் கருகு தாழ்ந்திரு
தினகர ருதயமாந் திறத்தின் மேதகு
பனகநன் மணிகுயின் றொளிரும் பண்புடைக்
கனககுண் டலங்களைக் காதிற் சேர்த்தினார். (௩௦)

2330 விளங்குமா மணிமிரி சிகையை வெண்ணிலாத்
துளங்குவெண் மணியணி யெனவிற் றாண்டுவ
வளங்கொள்வால் வளைக்கிறை வனப்பை வாங்கிய
களங்கவின் பெறவணை கதிர்கொண் முத்தமே. (௩க)

2331 செங்கதிர் படிந்தவான் செம்பொற் குன்றெனக்
குங்கும மெழுகிய குவவுத் தோள்களின்
மங்கல முழுமணி வலயஞ் சேர்த்தினார்
எங்கணு மிருள்கடிந் திரவி காட்டவே. (௩உ)

2332 வடுவறு பசும்பொன்செய் வாகு பூரணத்
தொடுவனப் புறமணித் தூணம் போன்றகை

நடுவண நிரைத்தனர் காலை ஞாயிறின்
விடுசுடர்த் திருமணி வளையின் மின்னவே. (௩௩)

2333 மன்கையி லிருநிதி வழங்கி மன்னுகார்
தன்கையி லகப்படத் தழீஇ மறைந்துறை
நன்கையில் வெளிவரு நயப்பிற் றேன்றுவ
முன்கையி லருமணிக் கடக முற்றியே. (௩௪)

2334 பொருதிரைப் படுமணி புரத்தன் மேம்படு
பெருவிறல் வியந்துகை பிடித்தன் மானுவ
வொருதனிப் பிறங்கைச்சூ டகத்தி னென்றவே
திருவிர லாழிச்செம் மணியின் செவ்வியே. (௩௫)

2335 மண்ணெலாங் கவின்பெற வந்த நங்கைதன்
கண்ணலா தினிப்பிறர் காண்டன் மாசெனத்
தெண்ணிலாப் பிழம்பினுந் திகழ்வெண் சாந்ததால்
அண்ணலார் மார்பினை மறைத்திட் டார்களே. (௩௬)

2336 பாங்கர்நீ ரருவிவீழ் பசும்பொற் கேழ்கிளர்
ஓங்கலி னடுவெயி லுதித்த தாமென
நீங்கிரித் திலவட நிழலு மார்பிடைத்
தீங்கதிர்த் தனிமணி யாரஞ் சேர்த்தினர். (௩௭)

2337 ஏமமா ணுதரபெந் தனத்தி ருத்திய
தூமணி மரகதச் சுடர்த பூஇக்கொளாத்
தேமல ரலங்கன்மார் பினன்செம் மேனியுங்
காமன திளவன்மெய் காட்டுங் காட்சித்தே. (௩௮)

2338 தேசிகன் றிருவரை செறித்த பானிறக்
கோசிகந் தனைவளைத் தொளிர்கொ ழும்பொன்ஞாண்
ஆசிலெண் டிசைபரந் தவிர்வெண் டிங்களை
மாசின்மின் கொடிசுலாம் வனப்பு மானுமே. (௩௯)

2339 பாதசா லகமணிப் பரல்பெய் நூபுர
மேதகு பொலங்கழல் கழலின் வீக்கியே
யேதமொன் றுறுவகை யிறைவன் பேர்பராய்க்
காதலன் றிருக்கையிற் காப்பு வீக்கினர். (௪0)

2340 தன்னிக ரில்லதோர் மணியிற் ருவில்சேர்க்
கன்னலஞ் சிலைமதன் கவினைச் சேர்த்தியே
மின்னுமி ழருங்கல மிலைந்த தொன்றெனப்
பொன்னெடுந் தோளினன் பொலிந்து தோன்றினன். (சக)

2341 உலகமா னெனத்தகு பொறையு மொண்மல
ரிலகமா னெனத்தகு மெழிலு மேய்தலாற்
கலகமான் விழிமடந் தையர்க்குக் காமரு
திலகமா னவண்மண வணியுஞ் செப்புவாம். (சஉ)

வேறு.

2342 வாமாண் கலைநுண் ணிடைமடவார்
வருகுன் றெனலாம் பிடியெருத்தப்
பாமராண் டவிசிற் குடைநிழற்றப்
பசும்பொற் றசும்பிற் கொணர்ந்தனவாம்
பூமாண் புனிதப் புதுப்புனலாற்
புரைதீர் விரைபைந் துவருரைசா
லோமா விகையு நிறையினிற்பெய்
துடனாட் டினரொள் ளிழையினையே. (சங)

2343 கண்ணுற் புலங்கொள் வதற்கிலதாய்க்
கருதற் குளதா மருநுசுப்பிற்
பெண்ணா ரமுதின் றிருவரையிற்
பிறழ்பா ளிதவெண் ணிலவதன்மேல்
விண்ணூர் சுடரிற் சுடர்மணிமே
கலைவேய்ந் திருமே ருவிற்புடைத்தங்
கண்ணாந் தெழுந்த துணைமுலைக்கு
மணிந்தா ரவிர்மான் மதக்குழம்பே. (சச)

2344 இடர்மே விடர்நின் றிழைக்குநர்போன்
றிறுமாந் தெழுந்த துணைமுலையாம்
வடமே ருவினைச் சுமந்தொசிந்து
வணங்கு மருங்குற் கணங்குறவே

சுடர்மே தருவெண் டாளவடஞ்
சுமப்பித் ததும்போ யுத்தரிகப்
படமேல் வனைந்தா ரிரும்பெனவே
பழிக்கப் படும்வன் மனத்தினரே. (சரு)

2345 தேமென் புகையிற் புலர்ந்தகுழற்
சிகையிற் றிருவி ளொடுந்தளவத்
தாமம் புனைந்து திருநுதற்குத்
தகுபொற் றிரும ணெழுதினராய்த்
தூமன் சுடர்வே லிணையிணையே
துணைக்கொண் டிணங்கு குழைபொருது
காமன் செயல்கூர் மதர்விழியிற்
கவினஞ் சனமு மெழுதினரே. (சசு)

2346 பிள்ளைப் பிறைவா ணுதற்றிருவின்
பெருந்தோட் டுணையிற் செழும்பனிநீர்க்
கொள்ளைக் குறுநுண் டுளியுறுகுங்
குமச்செங் குழம்பிற் கொழுங்கொடியுங்
கள்ளைக் கவிழ்கின் கிணிக்கமலக்
கணைவே ளரும்புங் கலந்தெழுதி
வள்ளைக் கொடியிற் கடிப்பிணையும்
வனைந்தார் மகளிர் மருடரவே. (சஎ)

2347 முற்சூழ்ந் திழைநல் வினைத்திறத்தான்
முதல்வன் கரம்பற் றுதற்கமைந்த
கற்சூ டகக்கை மணிவிரலிற்
கதிரா ழியையுஞ் செறித்ததற்பின்
விற்சூழ்ந் திலங்குந் துணைக்கணைபோன்
மிளிர்கொன் புருவம் புணர்ந்தவிழிப்
பொற்பூ மடந்தை தளிரடிமேற்
புனைந்தார் மணிநூ புரத்தையுமே. (சஅ)

2348 பொன்னந் துகளாற் கடிகமழ்மென்
பூநுண் டுகளாற் புணர்முலையா
ரின்னம் புறவே கவின்குடிகொண்
டிருக்குந் திருமே னியைவிளக்கி
முன்னந் திருப்பாற் கடற்பிறந்த
முதல்வி யெனப்பே ரழகமைத்த
பின்னன் குறுகாப் பணிந்தனரெம்
பெருமா னருள்காத் தருள்கெனவே. (சகூ)

2349 கடிநாண் மலர்ச்செந் திருமகடன்
கவின்வந் தொருங்கு குடியிருந்த
வடிநாண் மலர்க்கட் செங்கனிவாய்
மடந்தை வனப்பை வியந்தனராய்த்
துடிநா ணுசுப்பிற் சிலதியர்தாஞ்
சூழ்ந்தாண் டுரைபல் லாண்டெனுமப்
படிநாண் பயில்கற் புடைமடவார்
பல்லாண் டெனவாழ்த் தினர்மன்னோ. (ருo)

வேறு.

2350 நூலிய னுணங்கு கேள்வி நோன்பினர் விதித்த தெய்வப்
பாலிகை யகத்து மண்ணும் பவித்திரத் தெருவும் பெய்து
சாலியெட் பயறு முந்து சாமைதாந் தாதை மார்கள்
வாலிதிற் பால்வி ராய்த்தூஉ யங்குரம் வகுத்திட் டாரே. ()

வேறு.

2351 கொழும்பொன் னிலத்து மணிப்பலகை
கொணர்ந்து மிளிர்பட் டணைத்திமிர்வண்
டுழும்பொன் மலர்பெய் தவிசியற்றி
யுயர்மங் கலமோ ரிருநான்குந்
தொழும்பி னிகழ்மங் கையர்பரப்பித்
தொழில்செய் குரவர்க் கழகுதிகழ்
செழும்பொற் பலகை வலத்தமைத்தார்
திருக்கா வணத்தி னடுவணவே. (ருஉ)

2352 சதுரச் சதிரம் பெறப்பகழித்
தனையிற் கொழுங்கோ மயமெழுகி
மதியிற் றிகழ்வா லுகமதனல்
வனப்பி லுயர்தண் டுலம்பரப்பி
விதியிற் றருப்பை திசைதிசைவேய்ந்
தனலுய்ப் பருதி மிகுந்ததற்பின்
கதிநற் சமிதை நனந்தலையிற்
கணங்கொண் டடுக்கிக் களிதகவே. (ருங)

2353 தனிமாண் மறைமந் திரம்பரவித்
தகுதந் திரத்தொண் டமுற்றடத்துப்
பனிமாண் புடையாச் சியமுதலாப்
பகரா குதிகள் பழிப்பறவே
நனிமாண் குரவ னளித்தளிதோய்
நறுந்தோட் டிருண்மென் குழலியொடு
மிளிர்மாண் புதல்வற் றருதிர்கணத்
தெனத்தா தையர்க்கங் கிசைத்தனனே. (ருச)

இரண்டுந் தொடர்.

2354 மூன்று முரச முகிற்கணம்போன்
மும்மைப் புவனத் தினுங்கறங்கக்
கான்ற கதிர்முத் தணியினராய்க்
கமழ்தாரவனும் பொனங் கொடியும்
ஆன்ற தவிசிற் கணிபுணர்கா
ளகத்தெய் தினர்மா சறுவிசும்பிற்
றோன்று மதியுஞ் சகடுமுடச்
சுலவ நிலந்தொக் கதின்மன்னே. (ருரு)

2355 பொருப்பாற் கடலைக் கடைந்தமிர்தம்
புலவர்க் களித்த புயல்கிடந்த
திருப்பாற் கடலுந் திறந்தகிலந்
திருவி னெடுமுன் னினனென்பார்